# கோவில் வழிபாடும் உயர்வுதரும் விரதங்களும்



இணுவில், செகராசசேகரப்பிள்ளையார் கோவில் தர்மகர்த்தா

அமரர்

## சின்னத்துரை சுந்தரலிங்கம்

அவர்களின்

## ஞாபகார்த்த வெளியீடு

04 - 06 -2016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

*சிவமயம்*

# கோவில் வழிபாடும் உயர்வு தரும் விரதங்களும்

ஆலய வழிபாட்டு முறைகளும்,
விரதங்களின் விளக்கங்களும்,
ஆசௌசம் முதலிய சந்தேக நிவிர்த்திகளும்

யாழ்ப்பாணம், இணுவில், பருத்தியடைப்பு,
ஸ்ரீ செகராசசேகரப் பிள்ளையார் ஆலய
தர்மபரிபாலகர்

அமரர்

**உயர்திரு சங்கரப்பிள்ளை சின்னத்துரை சுந்தரலிங்கம்**

அவர்களின்

## நினைவு மலர்

*04 - 06 - 2016*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# சமர்ப்பணம்

எமது குடும்பத்தின் குலவிளக்கு,

பருத்திப் பிள்ளையார் என அழைக்கப்படும்

ஸ்ரீ செகராச சேகரப் பிள்ளையார்

திருவடிகளையே என்றும் நினைத்திருந்து

அவர் பணியே தம் மூச்சாகக் கொண்டு வாழ்ந்து

அன்போடு எமை வளர்த்து நல்ல நிலைக்கு உயர்த்திய

எமது அன்புத் தெய்வம்

யாழ்ப்பாணம், இணுவில், பருத்தியடைப்பு,

ஸ்ரீ செகராசசேகரப் பிள்ளையார் ஆலய

தர்மபரிபாலகர்

அமரர்

சங்கரப்பிள்ளை சின்னத்துரை

சுந்தரலிங்கம்

அவர்களது நினைவாக

இம்மலரினைச்

சமர்ப்பணம் செய்கின்றோம்

குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



தோற்றம்
01.07.1944

அமரர்

மறைவு
05.05.2016

# சின்னத்துரை சுந்தரலிங்கம்

## திதிவெண்பா

(சித்திரை அபரபட்சத் திரயோதசி)

இணுவிற்பதி சின்னத்துரை சுந்தரலிங் கத்தார்தாம்
கனிவுடனே செகராச சேகரன்தாள் – இணைந்த தினம்
துர்முகியாம் நல்லாண்டில் சித்திரையில் தேய்பிறைநாள்
நற்திரயோ தசியென் றறி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம், இணுவில், பருத்தியடைப்பு,

ஸ்ரீ செகராசசேகரப் பிள்ளையார் ஆலய

தர்மபரிபாலகர்

அமரர்

**சங்கரப்பிள்ளை சின்னத்துரை**

**சுந்தரலிங்கம்**

அவர்களின்

# வாழ்க்கை வரலாறு

செந்தமிழும் சைவமும் செழுங்கலையும் செழித்தோங்கிடும் இணுவையம்பதியில் செகராசசேகர விநாயகர் திருக்கோவில் சூழலில் இருந்து அக்கோவிலை அல்லும் பகலும் ஆதரித்துவந்த சின்னத்துரையும் அவர் மனைவி நாகம்மாவும் தருமம் வழுவாது நடத்திவந்த இல்லற வாழ்வின் பயனாக 1944ஆம் ஆண்டு ஆவணி மாதம் முதலாம் திகதி மூலநட்சத்திரத்தில் மூத்த மகனாக இப்பூமியில் சுந்தரலிங்கம் அவதரித்தார். இவரது சகோதரர்கள் ராசமனோகரி, செல்வரத்தினம், புஷ்பகாந்தி, கணேசன், சிவகுமார் (கனடா), ரவிச்செல்வம் (கொழும்பு) ஆவர். சுந்தரலிங்கம் அவர்கள் சகோதர பாசமும், சாந்தகுணமும், எல்லோருடனும் அன்புடையவராகவும் வாழ்ந்தார்.

இவர்மீது கொண்ட பாசப் பிணைப்புக் காரணமாக தந்தையின் அக்காவான வள்ளிப்பிள்ளை நாகலிங்கம் இவரை அன்புடன் வளர்த்துவந்தார். இவர் தமது கல்வியை யா/ இணுவில் சைவப்பிரகாச வித்தியாசாலையில் (இப்போது இணுவில் இந்துக் கல்லூரி) பெற்றுக்கொண்டார். இவருக்குக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கார் ஓட்டுவதற்கு மிகவும் விருப்பம். இதன் காரணமாக இவரது மாமனார் சிறு வயதில் இவருக்குக் கார் ஓட்டப் பழக்கி 18 வயதில் சாரதி அனுமதிப் பத்திரத்தையும் பெற்றுக்கொள்ளச் செய்தார். இவர் தமது தொழிலாக சாரதித் தொழிலையே மேற்கொண்டார்.

இவர் மணப்பருவம் எய்தியதும் அதே ஊரைச்சேர்ந்த விநாசித்தம்பி - தங்கம்மா தம்பதியினரின் ஒரே மகள் தேவகியை 1975ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 25ஆம் திகதி தமது மனவிருப்புடன் திருமணம் செய்துகொண்டார். தேவகியுடன் பிறந்த சகோதரர்கள் கங்காதரன், கலாதரன் ஆகியோர்.

சுந்தரலிங்கம் - தேவகி இருவரும் வள்ளுவனும் வாசுகியும்போல வாழ்ந்து வந்ததன்பேறாக பிள்ளைகளான கோபிநாத் (ஜெர்மனி), கோபிஷங்கர், சாரங்கா, அர்ஜனா (பிரான்ஸ்), கோபிவிருதன் ஆகிய மக்களைப் பெற்று வளர்த்தனர். மருமக்களாக அஞ்சலிக்கா (ஜெர்மனி), யான்சி (ஆசிரியை, கிளி. முருகானந்த ஆரம்பப் பாடசாலை), கெங்காதரன், சுரேஷ்குமார் (பிரான்ஸ்), ரட்ணாவதி ஆகிய மருமக்களையும் கண்டு அவர்களின் பேறாக பேரக் குழந்தைகளான இலக்கியன், சேகரன், செழியன், சுப்ரயா, சயனுயா, அனயா, றிச்சான் ஆகியோரைக் கண்டு மனம் குளிர்ந்தார். திரைகடல் ஓடியும் திரவியம் தேடு என்பதற் கிணங்க இவர் 1985ஆம் ஆண்டில் இருந்து 1999 ஆம் ஆண்டுவரை டோகாவில் பணியாற்றி நாடு திரும்பினார்.

இவரது பாட்டனார் சங்கரப்பிள்ளை பரம்பரையாகப் பராமரித்துவந்த ஆலயத்தை இவரது தந்தையும் சங்கரப் பிள்ளையின் மூத்த மகனுமாகிய சின்னத்துரை பராமரித்து அதன் நிர்மாணப் பணிகளை மேற்கொண்டு சிறப்பான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயமாக்கினார். அவர் தமது சுகவீனம் காரணமாகத் தமது மூத்த மகனாகிய சுந்தரலிங்கத்திடம் தமது பொறுப்புக்களை ஒப்படைத்தார்.

ஆலயத்தைப் பொறுப்பேற்ற சுந்தரலிங்கம் அவர்கள் 2003ஆம் ஆண்டு பாலஸ்தாபனம் செய்து பரிவார மூர்த்திகளை மக்கள் உதவியுடன் செய்து 2004ஆம் ஆண்டு மகாகும்பாபிஷேகம் செய்துவைத்தார். அதனைத் தொடர்ந்து பிரதான வாசல் இராஜகோபுரம் ஐந்து தளம் கொண்டதாக ஊர்மக்கள் உதவியுடன் நிர்மாணிக்கப்பட்டு 2009ஆம் ஆண்டு இராஜகோபுர கும்பாபிஷேகம் செய்துவைத்தார். அதனைத் தொடர்ந்து பஞ்சமுகப் பிள்ளையார் (தெற்கு) வாசல் மூன்று தளம் கொண்ட இராஜகோபுரம் தனது நிதியுடன் ஊர்மக்கள் நிதி உதவியுடனும் நிர்மாணிக்கப்பட்டு 01.02.2013ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் செய்துவைத்தார்.

எந்நாளும் செகராசசேகர விநாயகர் பாதம் வணங்கி எச்செயலையும் செய்யத் தொடங்குவார். அவர் தமது கண்போல இந்த ஆலயத்தைப் பராமரித்து வந்தார். சுகவீனத்தையும் பொருட்படுத்தாது அதற்கான மருந்து திருப்பணியே என எண்ணி செயற்பட்டார். கும்பாபிஷேகம் செய்து 12 வருடங்கள் பூர்த்தியான நிலையில் இவ்வருடம் மகோற்சவம் முடிவடைந்ததும் ஆகம விதிகளுக்கமைய 29.04.2016 இல் பாலஸ்தாபனம் செய்துவைத்தார்.

அதேவேளை விநாயகர் தமது செயற்பாடுகள் ஒழுங்காக நடைபெறும் என்று எண்ணித் தமது பாதகமலங்களில் அவரைச் சேர்த்துக்கொள்ள எண்ணி 05.05.2016 அதிகாலை 6.15 இற்குத் தம்மிடம் அழைத்துக் கொண்டார்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரு சி. சுந்தரலிங்கம் அவர்களுக்கும் செல்லச் சந்நிதிக்கும் உள்ள தொடர்பு

செல்லச்சந்நிதி முருகன் கோவிலுக்கும் சுந்தரலிங்கத் திற்குமிடையே நெருங்கிய பிணைப்பொன்று இருந்துள்ளது. சிறு வயதிலிருந்தே அவர் அக்கோவிலுக்கு அடிக்கடி சென்று வணங்கிவரும் வழக்கமிருந்தது. அவரது திருமணமும் சந்நிதி கோவிலிலேயே நடைபெற்றது.


திருமணமாகி முதல் ஐந்து ஆண்டுகள் மகப்பேறு கிடைக்காமல் வருந்திய சுந்தரலிங்கம் தம்பதியர் கந்தஷஷ்டி விரதம் அனுஷ்டிக்கத் தொடங்கினர். செல்லச்சந்நிதி சென்று அங்கேயே தங்கிப் பால் பழம் மட்டும் அருந்தி பக்தி வைராக்கியத்துடன் விரதம் அனுஷ்டித்த அவர்கள் அன்னதானக் கந்தனின் அருட்பார்வைக்கு ஆளானார்கள். அடுத்தடுத்து அன்பான மழலைகளைப் பெற்றெடுத்து மகிழ்ந்தனர்.

தொடர்ந்து தாம் உயிருடன் இருக்கும்வரை அதேபோல கந்தஷஷ்டி விரதத்தை வடாமல் அனுஷ்டித்து வந்தார் சுந்தரலிங்கம். அதுமட்டுமல்லாமல் வெள்ளிக்கிழமை தோறும் சந்நிதியானிடம் சென்று அங்கே தங்கி நீராடி வழிபாடியற்றி வருவது அவர் வழக்கம்.

பக்திமயமான அவர் வாழ்க்கையை இது காட்டுவதுடன் கந்தனின் அருட்பெருமையையும் இது நிரூபித்து நிற்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரங்கல் செய்தி

யாழ்ப்பாணம் இணுவில் பகுதியிலே பருத்தியடைப்பு கிராமத்தில் நடுநாயகமாக வீற்றிருந்து அருள்பாலிப்பவர் ஸ்ரீ செகராஜசேகர விநாயகப் பெருமான். மூர்த்தி சிறிதென்றாலும் கீர்த்தி பெரிதாக இருந்து அருள்பாலிக்கும் விநாயகப் பெருமான் தன்னை அண்டிய பக்தர்களையெல்லாம் சிறப்பாக வாழவைத்திருக்கிறார். நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக சிறிது சிறிதாக வளர்ந்து இன்று மஹோற்சவம் காணும் ஆலயமாக இவ்வாலயம் திகழ்கின்றது. இணுவில் கிராமத்தின் சிறந்த சிவாசார்யராக விளங்கிய சிவஸ்ரீ இராமநாதக் குருக்கள் இவ்வாலயத்தின் நித்தியபூசகராகக் கடமையாற்றியிருக்கிறார்.

முன்னாளில் இவ்வாலயம் திரு சங்கரப்பிள்ளை அவர்களால் பரிபாலிக்கப்பட்டு வரும்போதே நான் இவ்வாலயத்திற்குச் சென்றிருக்கிறேன். அதன்பின் அவர் மகன் சின்னத்துரை ஆலயத்தைப் பொறுப்பேற்று நடத்தினார். அதன்பின் அவர் மகன் சுந்தரலிங்கம் மிகச் சிறப்பாக எப்போதும் பிள்ளையார் நினைவாகவே இருந்து ஆலயத்தைப் பரிபாலித்துவந்தார்.

கும்பாபிஷேகத்திற்காக, பாலஸ்தாபனத்தை நடத்திவைத்துப் பிள்ளையார் அவரைத் தன்னுடன் சேர்த்துக்கொண்டவர். அவர் ஆரம்பித்து வைத்த பணி தொடர விநாயகர் திருவருள் புரிவாராக.

**சிவாகம ஞான பாஸ்கரன்**

**சிவஸ்ரீ தா. மகாதேவக் குருக்கள்**

**அதிபர், தர்மசாஸ்தா குருகுலம், இணுவில்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரார்த்தனை உரை

சுந்தரலிங்கம் அன்பானவர். அவரிடம் ஆழமான பக்தி இருந்தது. முற்கோபி. பின் உணர்ந்து வேதனைப்படுவது அவர் இயல்பு என்பதை ஊரில் உள்ளோர் அனைவரும் அறிவர். எனக்குத் தெரிய சங்கரப்பிள்ளை, சின்னத்துரை, சுந்தரலிங்கம் ஆகியோர் இக்கோவிலை ஆண்டுவந்துள்ளனர்.

சுந்தரலிங்கம் எந்த நேரமும் கோவிலில் இருப்பார். கோவிலுக்கு வருவோர் போவோரிடம் அன்பாகக் கதைப்பார். பிள்ளையாரிடம் அதிகம் அக்கறையாகப் பார்த்துக்கொள்வார். அவர் மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், சகோதரர்களிடமும் பாசமுள்ளவர்.

சுந்தரலிங்கம் முன்கோபுரம், தெற்குக் கோபுரம் ஆகியவற்றைத் தன்னுடைய தலைமையில் செய்து முடித்துள்ளார். இன்னும் கோவிலை உயர்த்த வேண்டும், இன்னமும் சில வேலைகள் செய்யவேண்டும், கும்பாபிஷேகம் செய்யவேண்டும் என்ற நினைவுகளுடன் இவைனடி சேர்ந்தார்.

கோவிலில் பாலஸ்தாபனம் செய்து திருப்பணி வேலைகள் ஆரம்பித்தும் உள்ளார். அவருடைய எண்ணம்போல் எல்லாத் திருப்பணிகளும் இனிதே நடைபெற விநாயகர் திருவருள் புரிவார்.

இந்நேரத்தில் அவர் உயிர் பிரிந்தது அவரது பலாபலன். மேலும் சிறப்பாகவும் அழகாகவும் விநாயகப் பெருமானுடைய திருப்பணி வேலைகளை அவருடைய பிள்ளைகளும் ஊர்மக்களின் உதவியுடன் செய்து முடிப்பார்கள். அன்னாரது குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**ந. உருத்திரமூர்த்திக் குருக்கள்**

**பிரதமகுரு, செகராசசேகரப்பிள்ளையார் கோவில்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அஞ்சலியுரை

அமரர் சின்னத்துரை சுந்தரலிங்கம் மறைவு கேட்டு அதிர்ச்சியானவர்களில் நானுமொருவன். இணுவில் மேற்கு செகராஜசேகரப் பிள்ளையாரின் திருவடியை என்றுமே தொழுகின்ற பாக்கியம் பெற்ற மனிதர். தனது மூச்சையே அவருக்கு ஒப்படைத்தவர் எனக் கூறினால் அதில் மிகை யொன்றுமில்லை.

ஆலயத்தில் திருப்பணிகளை காலம் தவறாது ஒழுங்காக மேற்கொண்டு இறைவனிடம் மட்டுமல்லாமல் அடியவர்களிடமும் நீங்காத இடத்தைப் பெற்றவர். எனவே அவரின் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல விநாயகப் பெருமானைப் பிரார்த்திப்போமாக.

**சிவஸ்ரீ உ. அபராஜிதக் குருக்கள்**
**ஆலயகுரு, செகராசசேகரப் பிள்ளையார் கோவில்.**
**பிரதமகுரு, கந்தசுவாமி கோவில், இணுவில்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் சுந்தரலிங்கம் அவர்களின் மறைவில் அரும்பிய கண்ணீர்க் காணிக்கை

தோன்றாமல்த் தோன்றி எமக்காகத் துவளாமல் பணி செய்து தேன்போல் தித்திக்கும் நல்வாழ்வு வாழ்ந்த தெய்வத் திருமகன் திரு சுந்தரலிங்கம் அவர்கள் இன்று எம்மோடு இல்லை. பாதி வயதினிலே தனது பயணத்தை முடித்து மீதி எதுவென்ற வினாக்குறியை எம் நெஞ்சங்களுக்கு ஈந்து இன்று கனவாய் கற்பனையாய் தெய்வமாய் அவர் மாறிப் போய் விட்டார்.

கண்கள் குளமாக கண்ணீர் வழிந்தோட கவலை நிழலாட கதறல் மொழியாக ஆருயிர் லிங்கத்தை எண்ணி எண்ணி உறவுகள் அழுகின்றன. உணர்வுகள் தொழுகின்றன. காலன் மறைத்தாலும் காலத்தால் மறையாத அந்தக் காவிய நாயகனை, அவன் வாழ்ந்த வாழ்க்கைச் சுவடுகளை கண்ணீரினூடு இவ்விடத்தில் கருதிப் பார்க்கின்றோம்.

சுந்தரலிங்கம் அவர்கள் என்னோடு நண்பனைப் போல அன்போடும் புன்சிரிப்போடும் அளவளாவி தினமும் காலையும் மாலையும் பருத்திப் பிள்ளையார் கோவிலுக்கு வந்து வாசல் படியில் அமர்ந்து கொண்டு சுவாரஸ்யமாகக் கதைப்பார்.


இப்படியாக வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த திரு சுந்தரலிங்கம் அவர்கள் இருதய நோய் காரணமாக திடீரென 5-5-2016 அன்று இவ்வுலகை விட்டு பூவுலகம் அடைந்தமையை யிட்டு நான் மிகுந்த கவலையும் வேதனையும் அடைகின்றேன். ஆன்னாரின் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல இணுவில் செகராசசேகரப் பிள்ளையாரின் திருவடிகளில் இன்புற்றிருக்க வேண்டி அவன் அருளை நாடுகின்றோம்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

**பவன் ஐயா (பிறேமதீபன் சர்மா), கொக்குவில்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரார்த்தனைச் செய்தி.

இணுவில் செகராசசேகரப்பிள்ளையார் கோவில் அறங்காவலர் உயர்திரு திரு சின்னத்துரை சுந்தரலிங்கம் அவர்கள் காலமான செய்தியறிந்து மிகுந்த வேதனை யடைகிறேன். ஆலயத்தின் பரம்பரை அறங்காவலரான இவர் ஆலயத்தை வளர்த்தெடுப்பதில் மிகவும் அக்கறையோடு செயற்பட்டவர். ஆலயத்தின் இராஜகோபுரத் திருப்பணியை ஆரம்பித்து வெற்றிகரமாக நிறைவேற்றியவர். கும்பா பிஷேகத்தையும் நன்கு நிறைவேற்றியவர். கடவுள் பக்தி நிறைந்த இவரை சிறுவயது முதல் நான் நன்கு அறிவேன். வாரந்தோறும் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்திற்கு தம்பதிகளாக வருகை தந்து வழிபாடு செய்து விட்டு என்னைச் சந்தித்து உரையாடிச் செல்வார். சிரித்த புன்முறுவல் பூத்த முகத்துடன் எவ்வேளையும் காட்சிதரும் திரு சி. சுந்தரலிங்கம் அண்ணனின் பிரிவு அவரோடு பழகியவர்கள் அனைவரிற்கும் மிகுந்த துயரத்தைத் தந்துள்ளது. என் செய்வோம். பிறப்பும் இறப்பும் இறை நியதிப்படியே நடைபெறுகிறது. அன்னாரின் ஆத்மா சாந்தி பெற துர்க்காதேவியைப் பிரார்த்தித்து எனது இதய அஞ்சலியை சமர்ப்பித்து அமைகிறேன்.

**செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு திருமுருகன்**
**தலைவர்,**
**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,**
**தெல்லிப்பழை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரங்கற்செய்தி

சின்னத்துரை சுந்தரலிங்கம் என்ற செயற்திறன்கொண்ட மனிதரை இழந்துவிட்டது இணுவில் கிராமம். அன்னாரை இளமையிலும் இணுவில் பெருமையை கூறும் அளவிற்கு துடிப்புள்ள இளைஞராகக் கண்டு பெருமைப்பட்ட காலம் அந்தக் காலம்.

பின்னர் குடும்பமாகி குடும்பத்துடன் இன்பமாக வாழ்ந்த காலமும் என் கண்முன்னே நிற்கிறது. பிள்ளைகளின்மீது பாசமும் நேசமும் கொண்டு சிறந்த குடும்பத் தலைவனாகத் திகழ்ந்தார்.

பின்னர் அவரின் பரம்பரைப் பரிபாலன கோவிலான வெகராசசேகரப் பிள்ளையார் கோவிலின் வளர்ச்சியில் பேரன் சங்கரப்பிள்ளை, தந்தை சின்னத்துரை அவர்களின் வழியில் சி. சுந்தரலிங்கம் அவர்களும் மிகுந்த அக்கறையுடன் வழிநடத்திச் சென்றார்.

இவரின் காலத்தில் கோவிலில் பல திருப்பணிகள் நிறைவேறின. நீண்டநாள் கனவாக இருந்த செகராசசேகரப் பிள்ளையாரின் புகழைப் பாடும் பாடல்களை இறுவட்டில் வெளியிட்டு உலகப் புகழை நிலைநாட்டியமை அவரின் பெருமையைத் தினம் தினம் கூறும் செய்தியாகும்.


அவரின் திடீர் இழப்பு பேரிழப்பாயினும் அவரின் ஆத்மா விநாயகர் தாளில் என்றும் இருக்க பிரார்த்திக்கின்றேன்.

**சு. சண்முக குமார்**

**கோட்டக் கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறை திருப்பணியே எப்போதும் நினைப்பவர்!

சின்னத்துரை சுந்தரலிங்கம் அவர்களின் பிரிவுச்செய்தி கேட்டு அதிர்ந்து கோனவர்களில் நானும் ஒருவன். செகராச சேகரப் பிள்ளையார் கோவிலுக்கு நாங்கள் சென்றால் "வாருங்கள்" என்று வரவேற்க அவர் இல்லையே என்று நினைக்க மனது கனக்கிறது.

இறை திருப்பணியையே எப்போதும் நினைவில் வைத்திருப்பவர். ஆலயத்தில் திருப்பணிக் கதை அன்றி வேறு கதை பேசாதவர். "தம்பி பிள்ளையாருக்கு இன்ன வேலை செய்யப்போகிறேன் மாமாவிடம் சொல்லி உதவச் சொல்லுங்கள்" என்பதே அவர் என்னிடம் எப்போதும் சொல்லும் வார்த்தையாகும்.

பரம்பரைக் கோவிலைப் பக்குவமாகப் பரிபாலித்தவர் அவர். கோவில் புனருத்தாரண வேலைகளுக்கான நிதியுதவிகளைத் தேடி ஊர் முழுவதும் திரிந்தவர். திருநீற்றுப் பூச்சும் சிரித்த முகமும் பிள்ளையார் கோவிலை நிறைவடையச் செய்தவை. அவை மக்கள் மனத்தில் என்றும் நிலைக்கும்.

**ம. பா. மகாலிங்க சிவம்**

**சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் (தமிழ்)**

**வலிகாமம் வலயம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம்
16 . 07 . 1944

மறைவு
05 . 05 . 2016

இணுவில் மேற்கு இணுவிலைப் பிறப்பிடமாகவும்
வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர் சின்னத்துரை சுந்தரலிங்கம்

அன்பு தீபம் அணைந்ததேனோ?
இப்புவியில் வாழ்ந்த எவரும்
இறுதி காண்பது விதியின் பயனோ?
ஒப்பிலா உண்மைத் தத்துவங்கள்
உங்கள் வாயில் வருமே என்றும்
இப்புவியில் வாழ்ந்து சாதித்த உங்களை
இனி எப்புவியில் காண்போம்?
உங்கள் பிரிவால் தவிக்கும் நெஞ்சங்களை
காலமே விரைந்து ஆறுதல் தாராயோ

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இணுவில் மேற்கு,
இணுவில்.

சகோதரர்கள்,
பெறாமக்கள், மருமக்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



பிறப்பு 16 - 07 - 1944

இறப்பு 05 - 05 - 2016

அமரர்

## சின்னத்துரை சுந்தரலிங்கம்

**காற்றோடு வந்த செய்தி எம்மைக்**
**கண்கலங்க வைத்தய்யா**
**ஆறாத கண்ணீர் வெள்ளத்தில்**
**எமை எல்லாம் ஆழ்த்திவிட்டு**
**மீளாத பயணம் நீர்**
**விரைவாகச் சென்றதேனோ?**

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

05.05.2016

நண்பர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்

எங்கள் குடும்பத்தின் ஆருயிர்த் தலைவராய் பேரன்பின் பாத்திரமாய் விளங்கிய **திரு சின்னத்துரை சுந்தரலிங்கம்** அவர்களின் மறைவுச் செய்தியைக் கேள்வியுற்றுப் பல வழிகளிலும் ஆறுதல் கூறி உதவி புரிந்தோர்க்கும், இல்லத்திற்கு வந்து அனுதாபம் தெரிவித்து ஆறுதல் கூறியவர்கட்கும், ஈமக்கிரியைகளிலும் இறுதி ஊர்வலத்திலும் கலந்து கொண்டவர்கட்கும், அனுதாபச் செய்திகளைத் தொலைபேசி வாயிலாகவும், முகநூல் மூலமாகவும் அறிவித்து எமது துயரில் பங்குகொண்ட அன்புள்ளங்கட்கும், கண்ணீர் அஞ்சலி செலுத்தியவர்கட்கும், மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தியவர்கட்கும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் வெளியிட்ட அன்புள்ளங்களிற்கும் இம்மலருக்குத் தம் நினைவலைகளை அனுப்பியவர்கட்கும், சிறந்த முறையில் இதனை வடிவமைத்துத் தந்த அச்சகத்தினருக்கும் எல்லா வகைகளிலும் நம்மோடு தோள்கொடுத்து நின்று உதவிய அனைவருக்கும் முன்னதாக வைத்தியசாலையில் வேண்டிய சிகிச்சைகளையும் வழங்கி சகல ஆதரவையும் நல்கிய வைத்தியர்கள், தாதியர்கள், உத்தியோகத்தர்கள், தொழிலாளர்கள் அனைவருக்கும் ஆற்றொணாத் துயர மத்தியில் நாவெழா நிலையில் பணிவன்புடன் நன்றி நவில்கின்றோம்.

**இணுவில்** **- குடும்பத்தினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலய வழிபாடும் அற்புத விரதங்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கையும் வழிபாடும்

## இறைவன்

இந்தப் பூமியும் இங்கு காணப்படும் உயிருள்ள, உயிரற்ற பொருட்களும் பூமியைச் சூழ்ந்துள்ள சூரியன், சந்திரன், கோள்கள், நட்சத்திரங்கள் முதலியனவும் ஓர் ஒழுங்கான முறையில் இயங்குகின்றன. இவற்றை இயக்குபவர் யார்? மழை, வெயில் போன்ற மாற்றங்களும் அதற்கேற்ப விளைகின்ற பயிர்களும் மரம், செடி, கொடிகளின் வளர்ச்சியும் நமது வாழ்க்கைக்கு உகந்த வகையில் சீராக அமைக்கப்பட்டுள்ளன. இவற்றுக்கெல்லாம் காரணமானவர் யார்?

யாரோ ஒருவர் எம்மையெல்லாம் இயக்குபவராக நமக்கு மேல் இருக்கிறார். அவரே கடவுள். அவர் கண்ணுக்குப் புலப்படாவிடினும் அவரை நாம் உணர்கிறோம்.

அவரை நாம் வெளியில் எங்கும் தேடத் தேவையில்லை. அவர் நாம் அறியா வகையில் நம்முடனே என்றும் இருக்கிறார். எல்லா இடங்களிலும் நிறைந்துள்ளார். எல்லா உயிர்களிலும் உயிருக்கு உயிராக உள்ளே உறைகின்றார். அதேநேரத்தில் அனைத்தையும் கடந்து எங்கும் வியாபித்திருக்கின்றார். அதனால்தான் அனைத்தையும் **கட**ந்தும் அனைத்தின் **உள்**ளேயும் இருப்பவர் என்ற பொருளில் **கடவுள்** எனக் கூறப்படுகிறார். காற்றினை நாம் எவ்வாறு உணர்கிறோமோ மின்சக்தியை நாம் எவ்வாறு புரிந்துகொள்கிறோமோ அவ்வாறு கடவுளை உணர வேண்டும்.

அனைத்தையும் ஆள்பவர் என்பதனால் **ஆண்டவன்** என்றும் யாவருக்கும் தலைவன் என்பதனால் **இறைவன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது **ஈசன்** என்றும் ஒளிபொருந்தியவர் என்பதனால் **தேவன்** என்றும் போற்றப்படுகிறார்.

அவர் எல்லா உயிரினங்களையும் அன்போடு காக்கிறார். பூமி சுழல்வதும் சூரிய, சந்திரர்களின் இயக்கமும் மழை - வெயில், இரவு – பகல் போன்றவை தோன்றுவதும் அவராலேயே நிகழ்கின்றன. அவரவர்கள் செய்யும் நற்செயலுக்கான நற்பயன்களையும் தீய செயல்களுக்கான துன்பங்களையும் அவரவருக்கு ஊட்டுபவர் கடவுளே ஆவர். அன்போடு வேண்டுதல் செய்பவர்களுக்கு இரங்கி அவர்கள் வேண்டும் வரங்களை அவர் நல்குவார். படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழில்களை அவர் செய்கிறார்.

யாரும் காண முடியாத இறைவனை ஓவியங்களில் வரைந்தும் திருவுருவச் சிலைகளாக உருவாக்கியும் நமது முன்னோர்கள் நமக்குத் தந்திருக்கின்றனர். அவற்றை நாம் கோவில்களிலும் வீட்டிலுள்ள சுவாமி அறைகளிலும் வழிபடுகிறோம்

## ஆலயம்

கடவுளை நாம் நன்றியோடு துதிக்கவேண்டும். என்றும் போற்றி வணங்கவேண்டும். எங்குமுள்ள இறைவனை நாம் மனமொன்றி இலகுவாக வழிபடுவதற்கு வாய்ப்பாக ஆலயங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஆலயம் என்பதன் பொருள் ஆன்மா லயப்படும் இடம் என்பதே. உயிர்கள் ஆகிய நாமே ஆன்மா எனச் சொல்லப்படுகிறோம். லயப்படுதல் என்றால் வேறு நினைவு இல்லாமல் இறைவனையே நினைத்து மனத்தை ஒருங்கு குவித்து வழிபடுதல் ஆகும்.

ஆலயம என்பதற்கு கோவில் என்றும் பெயர். கோ என்றால் கடவுள். இல் என்றால் இருப்பிடம். எனவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுளின் இருப்பிடம் கோவிலாகும். எங்கும் நிறைந்திருக்கும் கடவுளைச் சிறப்பாக வழிபடக் கோவில் அமைத்திருக் கிறார்கள்.

ஆலயத்தில் பெரிய மண்டபங்கள் பல அமைந்திருக்கும். எல்லோரும் கூடி வழிபாடு செய்வதற்கு அவை உதவுகின்றன. உயர்ந்த கோபுரங்கள், ஓவியங்கள், சிற்பங்கள் முதலியன நமது மனத்தைக் கவரும். மகிழ்ச்சியை ஏற்படுத்தும்.

ஆலயத்தில் ஒலிக்கின்ற மந்திர ஒலிகளும் திருமுறைப் பாடல்களும் மிகுந்த சக்தி வாய்ந்தவை. அவற்றோடு அங்கே ஒலிக்கின்ற மணி ஒலி, மேளம், நாதஸ்வரம் முதலிய மங்கல வாத்தியங்களின் ஒலி, சாம்பிராணி வாசனை முதலியன நமது உள்ளத்தில் பக்தி உணர்வினை எழுப்புகின்றன.

அங்கு சென்று நாம் மனம், வாக்கு, காயம் என்னும் திரிகரணங்களாலும் வழிபாடுகளைச் செய்ய வேண்டும். மனத்தால் இறைவனை நினைத்தலும் வார்த்தைகளால் இறைவன் புகழ் பாடுதலும் உடலால் ஆலயத் தொண்டுகள் செய்வதுமே திரிகரண வழிபாடு ஆகும்.

ஆலயத்தில் நாம் நம்மை உயர்ந்தவர்களாகக் கருதாமல் இயன்ற அளவு தொண்டுகள் செய்ய வேண்டும். கூட்டுதல், கழுவுதல், மாலை கட்டுதல், பூந்தோட்டம் அமைத்தல் முதலிய இவற்றைச் சரியைத் தொண்டுகள் என்பர். இவை மனத்திற்கு மகிழ்ச்சியை ஏற்படுத்துவதுடன் நல்ல உடற் பயிற்சியாகவும் அமைகின்றன. வீதி வலம் வருதல் வீழ்ந்து வணங்குதல் முதலியனவும் சிறந்த உடற் பயிற்சிகளாக இருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆலய வழிபாடு

தினமும் நாம் கோவிலுக்குச் சென்று கடவுளை வழிபட வேண்டும். பலிபீடத்திற்கு இப்பால் வீழ்ந்து வணங்கவேண்டும். ஆண்கள் அட்டாங்க நமஸ்காரமும் பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரமும் செய்யவேண்டும். அட்டாங்க நமஸ்காரம் என்பது எட்டு அங்கங்கள் நிலத்தில் பட வணங்குவது. தலை, கையிரண்டு, செவியிரண்டு, வாய், புயங்களிரண்டு என்பனவே அட்டாங்கம் என்னும் எட்டு உறுப்புக்களாகும். பஞ்சாங்க நமஸ்காரம் என்பது ஐந்து உறுப்புக்கள் நிலத்தில் பட வணங்குவது. தலை, கையிரண்டு, முழந்தாளிரண்டு என்பனவே பஞ்சாங்கம் என்னும் ஐந்து உறுப்புக்களாகும்.

மூலாதார விநாயகர் என அழைக்கப்படும் கொடித்தம்பப் பிள்ளையாரை வணங்கவேண்டும். கொடித் தம்பத்தின் அருகில் நந்திதேவர் அல்லது அதற்குப் பதிலாக மூஷிகம் என்னும் எலி, மயூரம் எனப்படும் மயில், சிம்மம் என்னும் சிங்கம், சுவானம் எனப்படும் நாய் இவற்றில் ஏதாவதொன்று இருக்கும். அவர்களிடம் நாம் உள்ளே போவதற்கு அனுமதி கேட்டுக்கொண்டு வீதி வலம் வந்து நமஸ்காரம் பண்ணியபின் உள்ளே சென்று வழிபடவேண்டும்.

முதலில் விநாயகர், அதன்பின் சிவன், அம்பிகை, சிவனது ஏனைய மூர்த்தங்கள் (சோமாஸ்கந்தர், சந்திரசேகரர், நடராஜர்), முருகன், நவக்கிரகங்கள், பைரவர் என வரிசைப்படி வணங்கவேண்டும். விநாயகரை வணங்கும்போது தலையில் மும்முறை குட்டி, இடது கையால் வலது காதையும், வலது கையால் இடது காதையும் பிடித்துக்கொண்டு மூன்று தரம் இருந்தெழும்பித் தோப்புக்கரணம் போடவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீழ்ந்து வணங்குவதும் வலம் வந்து வணங்குவதும் மூன்று அல்லது ஐந்து அல்லது ஏழு அல்லது ஒன்பது தரம் செய்யப்பட வேண்டும். தீபாராதனை நடைபெறும்போது கைகளை உச்சிமேல் குவித்து வழிபட்டு பஞ்சாலாத்தி முதலியன வெளியே கொண்டுவரப்படும்போது தொட்டு வணங்குதல் வேண்டும்.

வழிபாடுகள் முடிந்ததும் சண்டேஸ்வரர் சந்நிதி சென்று கும்பிட்டு மும்முறை மெதுவாகக் கைகொட்டி வழிபாட்டின் பலனைத் தரும்படி பிரார்த்திக்கவேண்டும். அதன்பின் ஆலயத்தின் ஒருபுறத்தே அமைதியாக அமர்ந்திருந்து சிவநாமங்களை மனத்திலே செபிக்கவேண்டும். அதன்பின் விபூதி, பிரசாதங்களைப் பெற்றுக்கொண்டு வீடு திரும்ப வேண்டும்.

ஆலயத்திற்குச் செல்லும்போது ஒரு தட்டிலே வெற்றிலை, பாக்கு, வாழைப்பழம், தேங்காய், கற்பூரம், அர்ச்சனைக்காசு (காணிக்கை) என்பன கொண்டு செல்லுதல் வேண்டும். வெற்றிலை இலட்சுமி வாசம் செய்யும் இடமாகும். வெற்றிலையும் பாக்கும் சேர்த்துத் தாம்பூலம் என்று சொல்வர். அது மங்களகரமானது. தமிழரின் பாரம்பரியப் பண்பாட்டை எடுத்துக் காட்டுவது. அதனோடு கனிந்த உள்ளத்தின் அடையாளமாகக் கனிந்த பழத்தையும் வைத்து இறைவனுக்குச் சமர்ப்பிக்கின்றோம். அவை அவரிடம் சமர்ப்பித்து மீண்டும் எம்மிடம் தரப்படும்போது அருள் அலைகள் அவற்றில் படிந்து நம்மை மேன்மைப்படுத்த உதவுகின்றன.

தேங்காயில் காணப்படும் முக்கண்ணும், முக்குறியும் அவை நமது தெய்வீகத்தை எடுத்துக் காட்டுகின்றன. கடினமான அதன் ஓட்டினை பிளந்ததும் உள்ளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெண்மையான, சுவையான தேங்காயும், இனிமையான இளநீரும் வெளிப்படுகின்றன. நமது ஆணவ மலத்தை அகற்றி (தீய சிந்தனைகள்) உள்ளன்போடு முயற்சித்தால் இறையருள் வசத்தால் நமக்கு நற்பயன் கிட்டும் என்பதன் அறிகுறியாகத் தேங்காய் உடைக்கப்படுகிறது.

## திருவுருவங்கள்

உருவம் ஒன்றுமில்லாமல் எல்லா இடங்களிலும் பரந்து கலந்திருக்கின்ற இறைவனுக்கு அங்கே சில உருவங்களை அமைத்திருக்கிறார்கள். கடவுளை நாம் நினைத்து வழிபடுவதற்கு அவை உதவுகின்றன. பிள்ளையார், சிவபெருமான், உமாதேவியார், முருகன், வைரவர் முதலிய பல வடிவங்களில் நாம் கடவுளை வழிபடுகிறோம்.

நமது ஒரே தந்தையாரை அவர் வெவ்வேறு வயதுகளில் வெவ்வேறு தோற்றங்களில் எடுத்துவைத்திருக்கும் புகைப்படங்களில் கண்டு மகிழ்வதுபோல ஒரே கடவுளை நாம் பல தோற்றங்களில் கண்டு மகிழ்கிறோம்.

அந்த உருவங்களுக்கு அபிஷேகம் செய்து தூய்மையாக்கி ஆடை அணிகள் அணிவித்து அலங்கரிக்கின்றோம். விசேட நாட்களில் இறைவனின் திருவுருவங்களுக்கு பால், தயிர், பஞ்சாமிர்தம், இளநீர் முதலியவற்றால் அபிஷேகம் செய்கின்றோம். இப்படி அபிஷேகங்கள் செய்வதால் இறைவன் மகிழ்ச்சி அடைந்து நமக்குப் பல்வேறு பலன்களை அருளுகிறார். இன்னொரு வகையில் பார்க்கின்றபோது, இப் பொருட்கள் அங்கு அபிஷேகமாகும்போது சூழல் குளிர்ச்சியடைந்து அங்கு ஒருவித சக்தி உண்டாகிறது. தீபங்கள் ஏற்றி வைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசனைத் தூபங்கள் இட்டு பலகாரங்கள், பழங்கள், வெற்றிலை, பாக்கு முதலியவற்றை அவருக்கு நிவேதனம் செய்து வணங்குகிறோம்.

தாமரை, மல்லிகை, முல்லை, சண்பகம், நித்திய கல்யாணி, நந்தியாவர்த்தை, செம்பரத்தை, செவ்வரளி, பொன்னொச்சி போன்ற பூக்களும் செம்பரத்தை, பொன்னொச்சி, வில்வம், நெல்லி, கடம்பு, வன்னி போன்ற மரங்களின் இலைகளும் இறைவனுக்கு அர்ச்சனை செய்ய உகந்தவை. இவ் இலைகளைப் பத்திரம் எனச் சொல்வர். அறுகு விநாயகருக்கும் துளசி விஷ்ணுவுக்கும் விசேடமாக உரியன.

## திருமுறைகள்

இறைவனது பெருமைகளைப் புகழ்ந்து பாடும் பாடல்கள் பல இயற்றப்பட்டுள்ளன. அவற்றை பக்தியுடனும் இசையுடனும் பாடி மகிழ்கிறோம். இறைவனின் நாமங்களைத் திரும்பத் திரும்பக் கூறி வழிபடுதல் நாம ஜபம் என்பர். பலர் ஒன்று சேர்ந்து இவ்வாறு நாமங்களைக் கூறுதலும் பாடல்களைப் பாடுவதும் உண்டு. இதனை பஜனை என்பர். இவற்றின் மூலம் நமது நன்றியை ஆண்டவனுக்கு நாம் எடுத்துக் காட்டுவதுடன் நமது மனத்திலும் அன்பு, அமைதி, ஆனந்தம் முதலிய உணர்வுகளுடன் உற்சாகமாக நமது வாழ்க்கையைத் தொடர முடிகிறது.

இறைவன்முன் திருப் பாடல்களைப் பாடும்போது கைகளைக் குவித்து வணங்கியவாறு கண்களை மூடி இறைவனைத் தியானித்தபடி திருச்சிற்றம்பலம் என்று சொல்லி ஆரம்பித்துப் பாடி முடித்தபின்னரும் திருச்சிற்றம்பலம் என்று கூறி நிறைவு செய்ய வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த அருட்பாடல்கள் திருமுறைகள் என அழைக்கப்படுகின்றன. திருமுறைகள் பன்னிரண்டு பிரிவாகப் பிரிக்கப்பட்டுள்ளன. பன்னிரு திருமுறைகளிலிருந்தும் பாடல்கள் பாட முடியாதென்பதால் ஐந்து திருமுறைகளைத் தேர்ந்தெடுத்துப் பஞ்சபுராணம் எனப் பாடுவது வழக்கம். தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருப்புராணம் என்பனவே அவை. நேரம் போதாமலிருப்பின் தேவாரம், புராணம் இரண்டையும் பாடுவதுமுண்டு.

## திருவிழாக்கள்

ஆலயத்திலே விசேட நாட்களிலே திருவிழாக்கள் நடைபெறும். சதுர்த்தி, கார்த்திகை முதலிய விசேட தினங்களிலும் வருடம் ஒருமுறை நடக்கும் கொடியேற்று விழாவிலும் திருவிழாக்கள் நடைபெறுவதுண்டு.

கும்ப பூசை, அபிஷேகம், அலங்காரம், நிவேதனம்(உணவு கொடுத்தல்), தீபாராதனை (பல்வேறு தீபங்களை வரிசையாகக் காட்டுதல்), அர்ச்சனை (இறைவனின் பல்வேறு பெயர்களைச் சொல்லிப் புகழ்ந்து மலர்களை அவர் பாதங்களில் இடுதல்), பிரார்த்தனை முதலியன விசேட திருவிழாக்களின் வழமையான அங்கங்கள். இதன்பின் இதற்கென அமைந்த இறைவனின் திருவுருவங்களை எலி, இடபம், சிங்கம், குதிரை, யானை முதலிய வாகனங்களில் வைத்து வீதியைச் சுற்றி எடுத்து வருவர். இவ் வேளையில் மேளம் நாதஸ்வரம் முதலிய வாத்தியங்களை வாசிப்பர். அடியார்கள் பஜனை பாடுவர்.

தேர்த் திருவிழா தீர்த்தத் திருவிழா இரண்டும் மிகச் சிறப்பானவை. ஊர் மக்கள் யாவரும் திரண்டு வந்து இவ் விழாக்களில் கலந்து கொள்வர். அடியார்கள் பலர் காவடி எடுப்பர். பெண்கள் கற்பூரச் சட்டி எடுப்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவபிரான் நமக்கெல்லாம் தந்தையாக விளங்குகின்றார். அவரது சக்தியாகிய உமையம்மை நமக்கெல்லாம் தாயாக விளங்குகிறாள். அதாவது உலகின் பெற்றோர் சிவ சக்தியே ஆவர். சிவனது சக்தியாக அதாவது அவரது ஆற்றலாக விளங்கும் உமையைப் பார்வதி, உமாதேவி, சக்தி, பராசக்தி, அம்பிகை, அம்பாள் என்று பல பெயரிட்டு அன்போடு வணங்குகின்றோம்.

சிவன் சிவப்பு நிறத்தவன். அம்பிகை பச்சை நிறத்தவள். இருவரும் என்றும் ஒன்றாகவே இணைந்திருப்பர். அறிவும் ஆற்றலும் என்றும் சேர்ந்திருப்பதே பயன்தரக் கூடிய ஒன்றல்லவா? இவர்கள் இருக்குமிடம் கைலாயம் எனப்படும்.

சிவனுக்குரிய வாகனம் காளை. இது வெண்மை நிறமானது. சக்தியின் வாகனம் சிங்கம். அவ்விரு விலங்குகளும் அவர்களருகில் பகையின்றி அன்போடு அமர்ந்திருப்பதைப் படங்களில் நாம் காணலாம். காளையை இடபம் அல்லது நந்தி எனவும் கூறுவர்.

சிவனது கையில் அவருக்குரிய ஆயுதமாகிய சூலம் காணப்படும். அம்பிகைக்கும் ஆயுதம் சூலமே. நமக்கு வரும் கஷ்டங்களை அவர்கள் இந்த ஆயுதம் மூலம் அகற்றிவிடுகிறார்கள். கடவுள் உருவங்களில் வலது உள்ளங்கை மேலுயர்ந்து நம்மைப் பயப்பட வேண்டாம் எனக் காட்டிக்கொண்டிருக்கும். அபய கரம் என இதனைச் சொல்வர். இடதுகை கீழ் நோக்கியவாறு நமக்கு வேண்டியவற்றைத் தருவதாகக் காட்டும் பாவனையில் அமைந்திருக்கும். இது வரத கரம் எனச் சொல்லப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துசமயப் பழக்க வழக்கங்கள்

## நித்திய கருமங்கள்.

இந்துக்களாகிய நாம் நமக்கென்று சில நல்ல பழக்கங்களைக் கொண்டிருக்கிறோம். எப்பொழுதும் எக்காரியத்தைச் செய்யும்போதும் நாம் இறைவனையே நினைத்துக் கொண்டிருக்கின்றோம். காலையில் படுக்கையை விட்டு எழும்போது ''சிவசிவ'' என்று சொல்லிச் சிவபெருமானை நினைத்துக்கொண்டு எழவேண்டும். இரவு தூங்கப் போகும்போதும் "சிவசிவ" என்று திருநீறு அணிந்து சிவனை நினைத்தவாறு தூங்க வேண்டும்.

காலையில் நித்திரை விட்டு எழுந்தவுடன் பல்துலக்கி முகம் கழுவியபின் மூன்று விரல்களினால் "சிவசிவ" என்று நெற்றியிலே திருநீறு அணிந்துகொண்டு நமது பாடங்களைப் படிக்கத் தொடங்கவேண்டும். மலசலம் கழித்தபின் குளித்துத் தோய்த்து உலர்ந்த ஆடை அணிந்து நெற்றியில் திருநீறு அணிந்து கடவுளை வணங்கித் தேவாரம் முதலிய திருப்பாடல்களைப் பாட வேண்டும்.

காலை உணவு அருந்தியபின் பாடசாலைக்குச் சென்று பாடங்களைப் படிக்க வேண்டும். பள்ளிக்குச் செல்லும்போது வீண் வார்த்தைகள் பேசுதல், வீணான காரியங்களில் ஈடுபடுதல் முதலியவற்றைத் தவிர்த்து அமைதியாகச் செல்ல வேண்டும். ஆசிரியர்கள் கூறுவதைக் கவனமாகக் கேட்டுப் பாடங்களை மனத்தில் நன்கு பதிய வைத்துக் கொள்ளவேண்டும். நம்முடன் படிப்பவர்களுடன் அன்பாகப் பழக வேண்டும். அவர்களுடன் கோபித்தல், சண்டையிடல் என்பன தீய பழக்கங்களாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணவை உண்ணும்போதும் அவ்வுணவு எங்களுக்குக் கிடைத்தமைக்காக இறைவனுக்கு நன்றி சொல்லி அவரை வணங்கியே உண்ண வேண்டும். உணவை ஒருநாளும் வெறுக்கலாகாது. சுவையற்றது என அதனைக் குறை கூறக் கூடாது. உணவுதான் நம்மை வளரச் செய்வது. நம்மை வாழ வைப்பது நாம் உண்ணும் உணவே ஆகும். அதனால் அதனைத் தெய்வமாகப் போற்ற வேண்டும்.

தாவர உணவே சிறந்த உணவாகும். நாம் உயிரினங்கள் மீது அன்பு செலுத்த வேண்டும். எல்லா உயிர்களிடத்திலும் இறைவன் இருக்கிறான். அதனால் நாம் பிற உயிர்களுக்குத் தீங்கு செய்ய மாட்டோம். அதனால் மாமிச உணவு சாப்பிடுதல் கூடாது. சுகாதார அறிஞர்களும் மாமிச உணவு வகைகளை விடத் தாவர உணவுகளே நமது உடலுக்கு உகந்தது எனக் கூறுகின்றனர். உணவின்பின் பழங்கள் சாப்பிடுதல் நன்று.

மாலையில் நண்பர்களுடன் கூடி நன்றாக ஓடி விளையாட வேண்டும். அந்தி நேரமானதும் மீண்டும் கை, கால்களை அலம்பிச் சுத்தம் செய்து திருநீறு அணிந்து சுவாமிப் படத்தின் அருகே இருந்து விளக்கேற்றி வைத்து அமைதியாக வழிபட வேண்டும். தேவாரப் பாடல்களை இசையுடன் பாடி வணங்க வேண்டும்.

பாடசாலையில் கொடுத்த வீட்டு வேலைகளைச் செய்து அறிவுக்குரிய புத்தகங்கள், நல்ல கதைப் புத்தகங்கள் பாடல்கள் என்பவற்றைப் படித்தபின் இரவு உணவை உண்ண வேண்டும். குடும்பத்தவர்களுடன் சிறிது நேரம் அன்பாக உரையாடியபின் இறைவனை வணங்கித் திருநீறு அணிந்து தூங்கச் செல்லவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹோற்சவ விளக்கம்

## சைவ சித்தாந்த தத்துவம்.

ஆன்மாக்களைப் பசுக்கள் என்றும், அவற்றைப் பீடித்து நிற்கும் அறியாமையை பாசம் என்றும் (மும்மலங்கள்) ஆன்மாக்கள் சேரவேண்டிய தலைவனாகிய இறைவனைப் பதி என்றும் கூறுவது சைவ சித்தாந்த மரபாகும். பதி - பசு - பாசம் என்னும் இம் முப்பொருள்கள் பற்றிய கொள்கையே சைவசித்தாந்த தத்துவமாகும். இத் தத்துவத்தையே சிவாகமங்களின் ஞானபாதம் விளக்கி நிற்கிறது. இங்கு கூறப்படும் முத்திநிலையைப் பெறுவதற்கான வழிவகைகளையே சிவாகமங்களின் கிரியாபாதம் எடுத்துரைக்கின்றது. அதன் அடிப்படையிலேயே ஆலயங்களும் அங்குள்ள திருவுருவங்களும் கிரியைகளும் அமைகின்றன.

## மஹோற்சவம் என்பது.......

அவ்வகையில் மஹோற்சவங்களும் சைவ சித்தாந்த உண்மைகளைச் செயல்முறைகள் மூலமாகப் பாமர மக்களுக்கு விளக்கிப் படிப்படியாக அவர்களை உய்விக்க ஏற்படுத்தப்பட்டவையே. மஹா - உற்சவம் என்பது பெரிய விழா எனப் பொருள்படும். ஆண்டுக்கு ஒரு தடவை நடத்தப்பெறும் இந்த விழா ஆலயங்களில் தினமும் நடைபெறும் நித்திய நைமித்திகக் கிரியைகளில் ஏற்படக்கூடிய குற்றங் குறைகளுக்குப் பிராயச்சித்த மாகவும் அமைகின்றது.

ஆகம விதி முறைகளுக்கமைய பத்துநாட்கள் முதல் இருபத்தைந்து நாட்கள் வரையில் மஹோற்சவம் என்னும் பெருந்திருவிழாக்கள் நடைபெறும். தினமும் காலை, மாலை இரு நேரங்களில் யாகபூஜை, கொடித் தம்ப பூஜை, சுவாமி வீதி வலம் வருதல் முதலிய நிகழ்ச்சிகள் தினமும் ஒரேமாதிரி நடைபெறும். இவற்றை விட, இத்திருவிழா நாட்களில் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விதமான சிறப்பினைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணலாம். அவற்றில் தத்துவ உண்மைகள் பல பொதிந்துள்ளன.

## மஹோற்சவம் என்பது ஐந்தொழில் விளக்கம்.

பொதுவாக மஹோற்சவம் என்பது ஐந்தொழில் விளக்கம் எனக் கூறுவர். படைத்தல் (சிருஷ்டி), காத்தல் (ஸ்திதி), அழித்தல் (சம்ஹாரம்), மறைத்தல் (திரோபவம்), அருளல் (அனுக்கிரகம்) என்னும் பஞ்ச கிருத்தியங்களை (ஐந்தொழில்) மஹோற்சவம் சுட்டிநிற்கிறது. முதல்நாள் கொடியேற்று விழாவுடன் பெருந்திருவிழா ஆரம்பமாகும். கொடியேற்றுவிழா படைத்தலைக் குறிப்பது. தினமும் வாகனங்களில் இறைவன் ஏறி வீதி வலம் வருவது காத்தலைக் குறிக்கும். வேட்டைத் திருவிழா, தேர்த் திருவிழா முதலியன அழித்தலைக் குறிக்கும். சூர்ணோற்சவம் என்னும் சுண்ணமிடித்தலும் மௌனோற்சவமும் மறைத்தலைக் குறிக்கும். தீர்த்தவாரி, சண்டேஸ்வர உற்சவம், ஆசார்ய உற்சவம் முதலியன அருளலைக் குறிப்பனவாகும்.

### படைத்தல்

கொடியேற்று விழாவிலே முக்கிய அங்கமாக அங்குரார்ப்பணமும் பேரீ தாடனமும் நடைபெறுகின்றன. அங்குரார்ப்பணம் என்பது முளைப் பாலிகை இடுதல். நவதானியங்களைப் பாலில் ஊறவைத்து ஓஷதி சூக்தம் என்னும் வேத மந்திர கோஷத்துடன் மந்திர சகிதமாகப் பூசித்து எடுத்த மண்ணிலிட்டு முளைகட்டச் செய்தலே அங்குரார்ப்பணம் ஆகும். முளைத்து வருதல் படைத்தல் அல்லவா?

### காத்தல்

ஆன்மா மலங்களின் பாதிப்பால் திசைதடுமாறிப் போகாமல் தமது திருவருட்சக்தியின் மூலமாகக் காத்தருள்வது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரம்பொருளின் கருணைப் பெருமை ஆகும். தானே தேடிவந்து காத்தருளும் அந்தக் கருணையை விளக்கவே இறைவன் வாகனத்தில் வீதி வலம் வந்து யாவருக்கும் காட்சிதந்து அருள்கிறார். இன்னொரு விடயத்தையும் இங்கு அவதானிக்கலாம். கொடிப்படத்திலே வாகனம் வரையப்பட்டு (எலி, இடபம், மயில் முதலியன.) அதன் முதுகில் இறைவனின் பிரதிநிதியாகிய அஸ்திரதேவர் (அங்குசம், சூலம், வேல் முதலியன) வரையப்பட்டிருப்பதைப் பார்க்கலாம். வாகனம் பசுவைக் குறிக்கிறது. அதாவது ஆன்மாவின் அடையாளம்தான் அந்த வாகனம். அதன்மீது இறைவனின் ஆயுதம் வரையப்பட்டிருப்பது அதன்மீது திருவருட்சக்தி பதிந்து அது பக்குவமடைந்திருக்கிறது எனப்தைக் காட்டுவதற்காகத்தான். பக்குவமடைந்த ஆன்மா பதியுடன் சேரமுடியும் என்பதனைக்காட்டவே அந்தக் கொடிச்சீலை கொடித்தம்பத்தில் சேர்வதாக அமைக்கிறார்கள்.

இங்கு வீதியில் எழுந்தருளிவரும் இறைவனும் வாகனத்தின் மீது வருதல் - வாகனத் திருவிழா - காத்தலைக் குறிக்கின்றதல்லா?

## அழித்தல்

வேட்டைத் திருவிழாவும், தேர்த்திருவிழாவும் அழித்தலைக் குறிப்பன. வேட்டை என்பது துஷ்ட மிருகங்களைக் கொன்றொழித்தலாகும். அரசர்கள் தமது நாட்டைக் காப்பதற்காக இடையிடையே தமது நாட்டின் எல்லைக் காடுகளுக்குச் சென்று வேட்டையாடுதல் மரபு. அதேபோல் இறைவனும் செய்வதாகப் பாவித்து இத் திருவிழாவைச் செய்கின்றோம்.

இங்கு அழிக்கப்படுவது உயிரல்ல. துஷ்ட மிருகங்களின் உடல்களே என்பது கவனிக்கத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர்கள் அழிக்கப்படுவதில்லை. அவை மறுபடி பிறப்பெடுக்கப் போகின்றன. நல்ல பிறவிகள் அவற்றுக்குக் கிடைக்கவேண்டும் என்ற நல்லெண்ணத்துடன், இப்பிறப்பிலே அவை பிற உயிர்களுக்குத் தீங்கு செய்யக் கூடாது என்பதற்காக அந்தக் கொடிய விலங்குகளை அரசன் வேட்டையாடுகிறான். அதுபோல இறைவன் ஆன்மாக்களுக்கு வழங்கிய உடல்களையும், உலகப் பொருட்களையும் அனுபவ நுகர்ச்சிகளையும் அழிக்கிறார்.

தேர்த் திருவிழாவும் அழித்தலைக் குறிக்கிறது. சிவபிரான் தேர்மீது ஏறி முப்புரங்களை எரிக்கச் சென்ற புராணக் கதையை நினைவூட்டுவது தேர்த் திருவிழாவாகும். தாரகாட்சன், கமலாட்சன், வித்யுன்மாலி என்ற மூன்று அரக்கர்களும் தமது வரபலத்தால் செம்பு, இரும்பு, வெள்ளி ஆகிய உலோகங்களாலான மூன்று பறக்கும் கோட்டைகளை உருவாக்கி அதிலிருந்தவாறு மூவுலகங்களையும் துன்புறுத்தி வந்தனர். அவர்களைத் தண்டிக்க நினைத்த எம்பெருமான பூமியைத் தேராகவும் சூரிய சந்திரர்களை அதன் சக்கரங்களாகவும் வேதங்களைக் குதிரைகளாகவும் பிரம்மாவை சாரதியாகவும் மேரு மலையை வில்லாகவும் வாசுகி என்ற பாம்பை அதன் நாணாகவும் விஷ்ணுவை அம்பாகவும் கொண்டு இந்த முப்புரங்களையும் அழிக்கப் புறப்பட்டார். தாமே அம்பாக இருந்து அழிக்கப்போகிறேன் என விஷ்ணு அகங்காரம் கொண்டமையால் தாம் தமது புன்னகையாலேயே முப்புரங்களை அழித்தார்.

இங்கு முப்புரங்கள் என்பது மும்மலங்களைக் குறிக்கும். “முப்புரம் என்பது மும்மல காரியம்” என இதனைத் திருமூலர் கூறுவார். இதனால்தான் தேர்த்திருவிழா அழித்தலைக் குறிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மறைத்தல்

சூர்ணோற்சவம் என்னும் சுண்ணமிடித்தலும் மௌனோற்சவமும் மறைத்தல் தொழிலைக் குறிப்பன. சுண்ணமிடித்தல் முழுக்கினுக்குரியது. அடுத்துவரும் ஆரோக்கியத்திற்காக மயக்கநிலைபோல் தியங்கிநின்று ஓய்வெடுத்தலே முழுக்கு. ஆன்மாவை இளைப்பாற்று வதற்காக மறைத்தலை இறைவன் செய்கிறான்.

மௌனோற்சவம் என்பது ஓசை, ஒலிகள் யாவும் ஒடுங்கிய நிலையில் இறைசிந்தனையில் லயித்திருப்பதைக் காட்டுவது. அதனால் அதுவும் மறைத்தல் ஆகியது.

## அருளல்

அருளல் தொழிலைக் குறிப்பவை தீர்த்தோற்சவமும் சண்டேஸ்வர உற்சவமும், ஆசார்ய உற்சவமும். இறைபக்தியால் ஆன்மாவிற்குக் கிடைக்கக்கூடிய உயர்பதவியை எடுத்துக் காட்டுவது சண்டேஸ்வர நாயனார் கதை. சாதாரண மனித நிலையிலிருந்து சண்டேஸ்வரப் பதவியை எட்டியவர் அவர். சண்டேஸ்வர அனுக்கிரக மூர்த்தி எனச் சிவபிரானது இருபத்தைந்து மாகேஸ்வர வடிவங்களுள் ஒன்று இருப்பதே இங்கு அருளல் தொழிலின் சிறப்பு இருப்பதை எடுத்துக் காட்டும்.

சைவ சித்தாந்தம் குருவுக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுக்கின்றது. குருவருளின்றேல் திருவருளில்லை. திருவருட்சக்தியே குருவாக வருவதைத் திருவருட்பயனின் அருளுரு நிலை என்ற அதிகாரம் தெளிவாக விளக்குகிறது. எனவே இறைவனின் திருவருளை எமக்கு நேரடியாக - பிரத்தியட்சமாகக் காட்டிநிற்பவர் குருவே என்பதால் குருவுக்கு ஒரு உற்சவத்தை ஆசார்ய உற்சவம் என்ற பெயரால் நடத்தப் படுகின்றது. அது அருளல் தொழிலுக்கு சிறந்த அடையாளம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நித்திய வழிபாடு

வீட்டில் ஓர் இடம் இறை வழிபாட்டிற்கென ஒதுக்கப்பட்டிருத்தல் அவசியம். அந்த இடம் புனிதமாகப் பேணப்பட வேண்டும். இடையூறுகள் இல்லாமல் சிறிதுநேரம் வழிபாடு செய்யக்கூடியதாக இருக்கவேண்டும்.

வீட்டிலிருக்கும் வழிபாட்டறையில் சுவாமித் திருவுருவங்களை விட சுவாமிப் படங்களே வைக்கப்படுவது நல்லது. முக்கியமாக விநாயகர், இலக்குமி, முருகன் மூவரது படங்களும் இருப்பது மிக முக்கியமானது. முருகன், வள்ளி - தெய்வானையோடிருப்பது விரும்பத்தக்கது.

அம்பிகையுடன் சேர்ந்த சிவன் அல்லது சிவகுடும்பப்படம், சிவகாமி அம்மனுடன் சேர்ந்த நடராசர் படம், சரஸ்வதி, மஹாவிஷ்ணு இவர்களின் படங்கள் வைக்கப்படலாம். குலதெய்வம் என்ற வகையில் வைரவர், மாரியம்மன், துர்க்கை, காளி ஆகிய படங்களும் ஏற்கத்தக்கதே.

எப்படியிருப்பினும், உக்கிரமான வடிவிலமைந்த படங்கள் தவிர்த்துக்கொள்வது அவசியம். சாந்த மூர்த்தங்களாக இருப்பதே நன்று.

பித்தளைக் குத்துவிளக்கு அல்லது அகல்விளக்கு ஒன்றை அங்கு வைத்து நல்ல நூல் திரியிட்டு நெய் அல்லது சுத்தமான தேங்காய் எண்ணெய் விட்டுக் காலை, மாலை விளக்கேற்றி வைத்து மலர்கள் சாத்தித் திருமுறைப் பாடல்கள் பாடி வணங்க வேண்டும். முடிந்தால் சிறிது நேரம் தியானத்தில் இருக்கலாம். சாம்பிராணித் தூபம் போடுவது மிகவும் நன்று.

இச்செயற்பாடு தடைகளை விலக்கிக் காரியசித்திக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிவகுப்பதுடன் மன அமைதி, உற்சாகம் ஆகியவற்றுக்கும் உதவும்.

விளக்கினைத் தினமும் துடைத்துப் புதுத்திரியிட்டு ஏற்றுவது வரவேற்கத்தக்கது. வாரம் ஒரு தடவை விளக்கைத் தேய்த்துக் கழுவுவதுடன் சுவாமிப் படங்களையும் துடைத்துத் துப்புரவு செய்யலாம். இதனை வெள்ளிக்கிழமைகளில் செய்யலாகாது. முதல் நாளிலேயே செய்துவிட வேண்டும்.

## ஆசௌசம் (துடக்கு அல்லது தீட்டு)

பிறப்பு, இறப்பு தொடர்பாகத் துடக்குக் காத்தல் என்று ஒரு பாரம்பரிய மரபு இந்துக்களிடையே நிலவுகிறது. உடல் சம்பந்தமாக மட்டுமன்றி மன உணர்வு தொடர்பாகவும் இத்தீட்டு என்ற விலக்கு கைக்கொள்ளப்படுகிறது.

உயிர் அல்லது ஆன்மா உடலோடு தொடர்புகொண்டு பூமியில் பிறக்கின்ற நிகழ்வும் மறுதலையாக உடலை விட்டு உயிர் பிரிந்து போகின்ற நிகழ்வும் மிக முக்கியமானவை. ஒன்று இன்பமானது. மற்றது துன்பமானது இரண்டுமே மன உணர்வுகளை அதிகம் பாதிக்கத்தக்கவை.

இந்நிகழ்வுகள் அந்த சுற்றாடலிலும், மிக நெருங்கியவர்கள் தொலைவில் இருந்தாலும் அவர்களையும் பாதிக்கக் கூடியவை. நுண்மையான சில அதிர்வுகள் அல்லது அருட்டுணர்வுகள் தொடர்பானவை என விளங்கிக்கொள்ள வேண்டும்.

ஒரு மாதகாலம் இந்தத் துடக்கு நீடிக்கிறது. குழந்தை பிறந்தால் அக்குழந்தையின் தாய் தந்தையர்க்கும், தந்தையின் சகோதரர்கள், பெற்றோர் மற்றும் ஆண்வழி உறவினர்களுக்கும் இத்துடக்கு உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதேபோல ஒருவர் இறந்தால் இறந்தவரின் ஆண்வழி உறவினர்களுக்கு அத்துடக்கு உண்டு.

துடக்குக் காலத்தில் ஆலயத்துக்குச் செல்லுதல், கிரியைகளில் பங்குகொள்ளுதல், விரதம் இருத்தல், சுபகாரியங்களில் கலந்துகொள்ளல் என்பன தவிர்க்க வேண்டும்.

31ம் நாளில் வீட்டிற்குப் புரோகிதர் (குருக்கள்) வந்து துடக்குக் கழித்தல் என்ற கிரியை செய்த பின்பே துடக்குக் கழிகிறது.

பெண்கள் ருதுவாகும்போதும் இவ்வாறான தீட்டு ஒன்று உண்டு. ஆனால் அது அந்தப் பெண்ணை மட்டுமே சாரும். இக்காலத்தில் அப்பெண்ணைத் தனியே நீக்கிவைக்காமல் வீட்டில் யாவரும் ஒன்றாக புழங்குவதால் அந்த வீட்டுக்காரரும் துடக்குக் காக்கின்றனர்.

பெண் ருதுவாகி 7ம், 9ம் அல்லது 11ம் நாள் அவளுக்குத் தோயவார்த்து வீட்டில் துடக்குக் கழித்தல் செய்ததும் துடக்கு நீங்கிவிடுகிறது.

மாதம்தோறும் பெண்களுக்கு உண்டாகும் மாதவிலக்கின்போது ஐந்து நாட்களும் அப்பெண் தீட்டு உடையவள் ஆகிறாள். அந்த நாட்களில் அவள் சுபகாரியங்கள் எதற்கும் தகுதியற்றவளாகிறாள். அவள் தனியே ஒதுங்கி இருப்பது அவசியம். ஐந்தாம் நாள் தோய்ந்த பின் அவள் தகுதியுடையவள் ஆகிறாள்.

## துடக்குக் கழித்தல்

பிள்ளையார் உருவம் ஒன்று மஞ்சள் அல்லது சாணியினால் பிடித்து அறுகம்புல் சாத்தி அதற்கு முதலில் பூஜை செய்யப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பால், தயிர், நெய், கோசலம், கோமம் என்னும் பசுவின் ஐந்து பொருட்களும் ஒன்றாகச் சேர்ந்து அதற்குப் பூஜை செய்யப்படும். இது பஞ்சகவ்விய பூஜை எனப்படும். பஞ்ச - ஐந்து, கவ்வியம் - பசுவில் பெறப்படுவது.

இதன் பின் ஒரு கும்பத்தில் வருணன் ஆவாகனம் செய்யப்பட்டு அவருக்குப் பூஜை நிகழ்கிறது. புண்ணியாக வாசனம் எனும் மந்திரம் ஓதப்படுகிறது.

பஞ்சகவ்வியம், வருண கும்பத்தின் நீர் என்பன கலக்கப்பட்டு அதனைத் துடக்குடையோர் யாவரும் அருந்துவர். அந்த நீர் வீடுமுழுவதும் தெளிக்கப்படுகிறது. இதுவே துடக்குக் கழிவு ஆகும்.

### சாமர்த்தியச் சடங்கு

ஒரு பெண் ருதுவாகியதும் குறித்த நாளின் பின் துடக்குக்கழிவு என்ற கிரியையுடன் சாமர்த்தியச் சடங்கும் நிகழ்கிறது. பெண்ணை அலங்கரித்து மணவறையில் இருத்தி அவளை யாவரும் ஆசீர்வதிக்கின்றனர். தோஷங்கள் நீக்குவதற்காக பிட்டு, களி, அன்ன உருண்டைகள், நிறைகுடம், நிறைநாழி, குத்துவிளக்கு முதலிய பொருட்களினால் ஆரத்தி எடுத்துத் திருஷ்டி சுற்றப்படுகிறது. கண்ணூறு கழித்தல் என இதனைச் சொல்வர்.

பூக்கள், தங்க நகைகள், நாணயங்கள், பால், மஞ்சள், குங்குமம், கண்ணாடி முதலிய மங்கலப் பொருட்களைப் பூஜை செய்து லட்சுமிவாசம் செய்யும் அந்தப் பொருட்களை ஒவ்வொன்றாக அந்தப் பெண் தரிசிக்கச் செய்வதுமுண்டு.

ஒரு பெண் வயதுக்கு வந்துவிட்டாள். அவள் இயற்கையான மலர்ச்சியைப் பெற்றுவிட்டாள் என்ற செய்தியை அனைவருடனும் பகிர்ந்து ஆசீர்வாதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறுவதும் மகிழ்ச்சியுடன் விருந்து உண்பதும் இச்சடங்கின் பிரதான நோக்கங்களாக அமைகின்றன.

## கல்யாண வீடு (திருமணம்)

ஓர் ஆணும் ஒரு பெண்ணும் திருமண பந்தத்தில் இணைந்து இல்லறம் என்னும் நல்லறத்தை ஆரம்பிப்பதைக் கொண்டாடுமுகமாகக் கல்யாண வீடு என்ற சடங்கு நடைபெறுகிறது.

இச்சடங்கிலே கவனிக்கத்தக்க முக்கிய அம்சங்கள்:

01. புதிதாக வாழ்வை துவங்க இருக்கும் அவ்விருவரும் ஒருவரை ஒருவர் அறிமுகம் செய்து புரிந்துகொள்ளல்.

02. புதிய வாழ்வை விநாயக வழிபாடு, நவக்கிரக வழிபாடு, சிவசக்தி வழிபாடு, அக்கினி வழிபாடு என்பவற்றோடு ஆரம்பித்தல்.

03. மணமகனும் மணமகளும் தாம் ஒருவரை ஒருவர் பிரியாது அந்த இணைப்பை மதித்து இறுதிவரை வாழ்வோம் என உறுதிகொள்ளல்.

04. அக்கினி சாட்சியாகவும், பெரியோர் சாட்சியாகவும் தமது திருமண பந்தத்தை உறுதிசெய்து பகிரங்கப் படுத்தல்.

05. பெற்றோர், குரு, பெரியோர் ஆகியோரின் ஆசியைப் பெறுதல்.

06. உறவினர், நண்பர், அயலவர் அனைவருடனும் சேர்ந்து விருந்துண்டு மகிழுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### புதுவரவுக்கான சடங்குகள்

ஒரு புதிய ஆன்மா உடல்பெற்று இப் பூவுலகில் பிறக்கும் சம்பவம் படிப்படியாக கொண்டாடப்படுகிறது.

ஒரு பெண் கருவாகியிருக்கும்போது சீமந்தம், வளைகாப்பு முதலிய சடங்குகள் சில வகுப்பினரால் (முக்கியமாகப் பிராமணர்களால்) செய்யப்படுகிறது.

குழந்தை பிறந்து 31ம் நாள் துடக்குக்கழிவு நடைபெறும்போது குழந்தைக்குப் பெயர்சூட்டுதல் என்னும் சடங்கும் நடைபெறும். இது நாமகரணம் எனப்படும்.

### கோயிலுக்கு எடுத்தல்

குழந்தை பிறந்து 41ம் நாள் குழந்தையை முதன்முதல் ஆலயத்துக்கு எடுத்துச்சென்று வழிபாடுகள் நடத்துவர்.

### அன்னப்பிராசனம்

5ம், 7ம், 9ம் மாதங்களில் பெண்குழந்தைக்கும் 6ம், 8ம், 10ம் மாதங்களில் ஆண்குழந்தைக்கும் சோறு தீத்துவார்கள். குழந்தையை ஆலயத்துக்கு எடுத்துச்சென்று வழிபாடு செய்தபின் சுபநேரத்தில் நன்கு பிசைந்த பாற்சோற்றைக் குழந்தைக்கு ஊட்டுவர். பால் மட்டும் அருந்தி வளரும் பிள்ளைக்கு முதன்முதல் உணவூட்டும் இந்நிகழ்வு அன்னப்பிராசனம் எனப்படும்.

### கர்ணவேதனம் (காது குத்துதல்)

குழந்தை பிறந்து 12ம், 16ம் நாளில் அல்லது 6ம், 7ம், 8ம், 10ம் மாதங்களில் ஒரு நல்ல நாளில் பொற்கொல்லர் ஒருவர் மூலம் குழந்தைக்குக் காதுகுத்தித் தோடு அணிவிப்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதுச்சோணையின் கீழ்ப்புறத்தில் நரம்புகள் சந்திக்கும் இந்த இடம் துளையிடப்படும்போது உடலில் சில நல்ல மாற்றங்களை ஏற்படுத்தும் என்கின்றனர். அதனால் ஆண், பெண் ஆகிய இருகுழந்தைகளுக்கும் காதுகுத்தும் வழக்கம் இருந்திருக்கிறது.

நவீனகால சீனதேச அக்யூபங்ச்சர் சிகிச்சை முறையுடன் இவ்விடயம் ஒப்பிட்டுப் பார்க்கத்தக்கது.

## வித்தியாரம்பம்

குழந்தைக்கு இரண்டு வயது பூர்த்தியாகி மூன்றாவது வயது நடந்துகொண்டிருக்கும் போது தைப்பூசம் அல்லது விஜயதசமி ஆகிய நல்ல நாளில் சுவாமி சந்நிதியில் வைத்துக் குழந்தைக்கு எழுத்துக்களைக் கற்பிக்கத் தொடங்குவர். இதனை வித்தியாரம்பம், ஏடுதுவக்குதல், அட்சராப்பியாசம் ஆகிய பெயர்களால் குறிப்பிடுவர்.

## மரணச் சடங்கு

ஓர் ஆன்மா உடல் எடுத்துப் பூவுலகுக்கு வரும் நிகழ்வு எப்படி ஒரு சடங்காகக் கொண்டாடப்படுகிறதோ அதேபோல அந்த ஆன்மா உடலை விட்டுப் பிரிந்துபோகும் நிகழ்வும் சடங்காகக் கொண்டாடப்படுகிறது.

ஆன்மாவும் புனிதமானது. அது வாழ்ந்த வீடாகிய இந்த உடலும் புனிதமானதே. இவற்றைக் கருத்தில் கொண்டு, உடல், உயிர் இரண்டையும் உரிய முறையில் அவற்றுக்குரிய இடங்களுக்கு அனுப்பும் செயற்பாடுகள் மரணச் சடங்குகளில் பொதிந்துள்ளன.

இந்த உடல் பஞ்சபூதங்களின் சேர்க்கையால் ஆனது. எலும்பும் தாதுக்களும் தசையும் பூமியின் அம்சம். இரத்தம் தண்ணீரின் அம்சம். உடலின் செயற்பாடுகளுக்கு உதவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகையில் நமது உடலில் பலவித வாயுக்கள் உலாவுகின்றன. இவை தசவாயுக்கள் என அழைக்கப்படுகின்றன. இவை காற்றின் அம்சம். வயிற்றிலே உணவைச் சமிக்கச் செய்யும் அக்கினி இருக்கிறது. இது ஜடராக்கினி எனப்படும். இது தீயின் அம்சம். இதயத்தினுள்ளே ஒரு வெளியிருக்கிறது. இது ஆகாசத்தின் அம்சம். இது சிதாகாசம் எனப்படும்.

உடலை உருவாக்கித் தந்த பஞ்ச பூதங்களிடம் முறைப்படி அது வழங்கப்பட வேண்டும். அதனால் உடல் சிவஸ்வரூபமாக பாவனை செய்யப்பட்டு அதற்குப் பூஜைகள் நடத்தப்பட்டு உருத்திர கும்பத்தினால் அதற்கு அபிஷேகம் செய்யப்பெற்று சிவாக்கினியிலே அந்த உடல் தகனம் செய்யப்படுகிறது. அவ்வாறு அது எரியும்போது பஞ்சபூதங்களுடன் அது சங்கமமாகிவிடுகிறது.

ஆன்மா உடலைப் பிரிந்தவுடன் அந்தச் சூழலிலேயே தங்கியிருக்கும். அவ்வேளையில் அந்த ஆன்மா பிரேத ரூபத்திலுள்ளதாகவே கருதப்படும். 31ம் நாட் கிரியைகள் வரை பிரேத ரூபத்திலிருக்கும் ஆன்மா அதன்பின் பிதிர்நிலை அடைந்து பிதிர்லோகம் சென்று முன்னோர்களுடன் சேர்ந்துவிடும். அதுவரை அதற்கேற்படும் பசி, தாகங்களைப் போக்கி ஆறுதல்படுத்தி அதன் பிதிர்லோகப் பயணம் சுகமாக அமைவதற்கு மரணக் கிரியைகள் உதவுகின்றன. இவை அந்தியேட்டி, சபிண்டீகரணம், கிருகயக்ஞம் என்பன.

பிதிர்லோகம் சார்ந்த பிறகும் அவ்வான்மா தனது கன்ம வினைகளுக்குரிய பாவ புண்ணிய பலன்களை அனுபவித்து மறுபிறவி எய்தி வாழும் நிலை சித்திக்கும் வரை அதற்கு எந்தவித துன்பங்களும் நேரக்கூடாது என்பதற்காக முதலாவதாண்டு முடியும் வரை மாதம் தோறும் மாசிகம் என்ற கிரியையும், வருட இறுதியில் ஆண்டுத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திவசம் (வருஷாப்திகம்) என்ற கிரியையும் பின்னர் ஆண்டுதோறும் திவசம் என்ற கிரியையும் செய்யப் படுகின்றன.

மனித வாழ்வின் ஆரம்பம் முதல் இறுதிவரை இவ்வாறு இறை வழிபாடுகளுடன் இணைந்த கிரியைகளும், சடங்குகளும் தொடர்வதைக் காணலாம். மரணமும் அதன் பின்னரும் கூடச் சடங்குகள் தொடர்கின்றன. இறப்புக்குப் பிந்திய கிரியைகள் அபரக் கிரியைகள் எனப்படும். மங்கலமாக நிகழும் ஏனைய கிரியைகள் பூர்வக் கிரியைகள் எனப்படும்.

பிறப்புக்கு முன்னரும், வளரும் குழந்தைப் பருவத்திலும் செய்யப்படும் சடங்குகள் பெற்றோரால் செய்யப்படுகின்றன. இறப்பின் பின்னர் செய்யப்படும் சடங்குகள் பிள்ளைகளால் செய்யப்படுகின்றன.

மூன்று தலைமுறைகள் இங்கு தொடர்புபடுத்தப் படுவதை அவதானிக்கலாம்.

பாரம்பரியம், பரம்பரை, மரபு என்பன இந்துக்களின் வாழ்வில் மிகவும் முக்கியத்துவம் பெறுவது தெரிந்ததே. வாழையடி வாழை எனக் கூறப்படும் வழிவழியான அந்தத் தொடர்பு நிலைப்பதற்கும் அவர்களுக்கிடையே பாசமும் பற்றும் வளர்வதற்கும், தலைமுறை இடைவெளி என்னும் இடையீடு தோன்றாமல் பாதுகாக்கவும் இச்சடங்குகள் துணைசெய்கின்றன அல்லவா?

**நிறைவுரை**

திருமணச் சடங்கு, மரணச் சடங்கு முதலியவற்றிலே சொல்லப்படுகின்ற பல வேத மந்திரங்கள் மிகுந்த அர்த்த புஷ்டியுடையவை. அவை வடமொழியாகிய சம்ஸ்கிருத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழியிலிருப்பதால் நம்மில் பலர் அதன் முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்வதில்லை.

அவற்றின் உச்சரிப்புக்கள், சப்தங்களினால் ஆற்படும் அதிர்வுகள் சூழலிலும், சம்பந்தப்பட்டவர்களின் உள்ளங்களிலும் சில நல்லதிர்வுகளை ஏற்படுத்தவல்லன.

அதுமட்டுமல்லாமல், அந்த மந்திரங்கள் அக்கிரியைகளில் ஈடுபடும் தனிமனிதனுக்குரியதாக இல்லாமல், பரந்துபட்ட உலக நன்மைகளுக்குரிய வேண்டுதலாவும்கூட அமைந்திருப்பது வியப்புக்குரியது.

மிகப் பழைய காலத்திலிருந்தே இந்துக்கள் பரந்த மனப்பாண்மையுடனும் விரிந்து பரந்த உலக உயிர்கள் அனைத்தையும் தன்னுடன் ஒன்றுசேர்த்துப் பார்க்கின்ற உளப்பாங்குடனும் இருந்து வருகிறார்கள் என்பதை உணர்ந்து நாம் பெருமைப்படலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விரதங்கள்

விரதங்களும் விழாக்களும் இந்துக்களின் வாழ்க்கையில் முக்கிய அம்சங்களாக இணைந்துள்ளன. இன்ன இன்ன விரதங்கள் இன்ன இன்ன நோக்கத்துக்காக அநுஷ்டிக்கப்பட வேண்டும், இத்தனை வருடங்கள் கைக்கொள்ளப்பட வேண்டும், இவ்வாறு கைக்கொள்ளப்பட வேண்டும் என்றெல்லாம் விதிமுறைகள் உண்டு. அவற்றை அறிந்து முறையாகக் கைக்கொள்வது அவசியம்.

அதிகாலைத் துயிலெழுதல், நீராடித் தோய்த்துலர்ந்த ஆடைகளை அணிதல், நித்திய கர்மாநுஷ்டானங்களை (அநுட்டானம் பார்த்தல்) முறைப்படி செய்தல், ஆலய வழிபாடு செய்தல், காலை மாலை வீட்டில் விளக்கேற்றி வழிபட்டு இயன்றவரை திருமுறைப்பாடல்கள் மற்றும் தோத்திரப் பாடல்களைப் பாடுதல், விபூதி, உருத்திராக்கம் முதலிய சமய சின்னங்களை அணிந்திருத்தல், காலை உணவினை நீக்கி, மதியம் ஒருவேளை மட்டும் அன்னமும் இரவில் பால்பழம் அல்லது பலகாரம் உண்ணல் என்பன எல்லா விரதங்களுக்குமே முக்கியமாக வேண்டப்படும் கட்டுப்பாடு களாகும்.

விரதநாளிலும் அதற்கு முதல் நாளிலும், மறுநாளிலும் மச்சம், மாமிசம், முட்டை முதலியவற்றை முற்றாக நீக்குதல் அவசியமாகும். உபவாச விரதமெனில் முதல்நாளிலும், அடுத்தநாளிலும் ஒருநேர உணவுண்டு விரதமிருத்தல் வேண்டும்.

வெங்காயம், உள்ளி, முருங்கைக்காய், சுரைக்காய், நீற்றுக்காய் இவற்றையும் இந்நாட்களில் உணவில் சேர்க்கக்கூடாது. தாம்பூலம் தவிர்க்கப்பட வேண்டும். விரத நாட்களில் இயன்ற அளவு தானதர்மங்கள் செய்ய வேண்டும். மாஹேஸ்வரபூஜை (அன்னதானம்) செய்வது மிக நன்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு விரதத்தை ஆரம்பிக்குமுன், இன்ன நோக்கத்துக்காக இன்ன முறைப்படி இவ்வளவு காலம் இந்த விரதத்தை அநுஷ்டிக்கப்போகிறேன்" என்று உறுதியாகத் தீர்மானம் செய்து (சங்கல்பம் செய்து) ஆலயம் சென்று சங்கல்பபூர்வமாக அர்ச்சனை வழிபாடுகள் செய்து ஆரம்பிக்க வேண்டும். குறிப்பிட்ட கால எல்லைவரை மாற்றமின்றி அவ்விரதத்தை ஒழுங்காகக் கைக்கொள்ள வேண்டும்.

உரிய காலம் முடிந்ததும் விரத உத்தியாபனம் செய்து விரதத்தை நிறுத்த வேண்டும். உத்தியாபன நாளில் காலை ஆலயம் சென்று விரதத்தை உத்தியாபனம் செய்கின்றேன் என்று சங்கல்பித்து அர்ச்சனை செய்வித்து அர்ச்சகருக்கு வேஷ்டி சால்வை தக்ஷிணை, அரிசி, காய்கறி முதலியன கொடுத்து வழிபாடு செய்தபின் பாரணையில் ஈடுபடலாம். உரிய நேரத்தில் பாரணை பண்ணுவதற்குத் தடைகள் ஏற்பட்டால் பாரணைக்காகச் சமைத்த உணவைச் சாமிப்படத்திற்கு முன் படைத்து அதனை உரிய நேரத்தில் முகர்ந்து விடுதல் போதுமானது. பின்னர் இயன்ற பொழுதில் சாப்பிடலாம். சமையல் தயாராவதிலும் தாமதம் ஏற்படின் சாமிப்படத்திற்கு முன் ஒருசிறு பாத்திரத்தில் நீரெடுத்து வைத்து அதில் துளசியை இரண்டு அடியிலைகளுடன் கூடிய கதிராக எடுத்து அந்த நீரில் இட்டுப் பூஜை வழிபாடு முடிந்ததும் அந்தநீரை அருந்திப் பாரணையை நிறைவு செய்யலாம். பின்னர் வசதியானபோது சாப்பிடலாம்.

ஒரு விரதத்தின் முடிவில் அதாவது பாரணை நாளில் இன்னொரு விரதம் வந்தால் இந்த முறையையே கடைப்பிடிக்க வேண்டுமென்று பெரியோர்கள் கூறுகின்றனர். இரண்டாவது விரதமும் உபவாசமாக இருந்தால் முதலாவது விரதத்தின் பாரணையைத் துளசிதீர்த்தம் அருந்தி நிறைவேற்றிவிட்டு, இரண்டாவது விரதத்தை முறைப்படி உபவாசமாக அநுஷ்டித்து அதற்கு மறுநாள் பாரணை செய்ய வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும்பாலும் கேதாரகௌரி நோன்பின் மறுநாள் ஸ்கந்த ஷஷ்டி விரதாரம்பம் அல்லது ஸ்கந்தஷஷ்டி விரதமுடிவில் அதாவது பாரணையன்று சோமவாரவிரதம் வருவதுண்டு. இந்த சந்தர்ப்பத்தில் மேற்கூறிய விதிமுறையே அநுசரிக்கப்படவேண்டும்.

சிலர் உதயத்திற்கு முன் முதல் விரதத்திற்குரிய பாரணையை முடித்து விடுவதுண்டு. ஆனால் சூரியோதயத்திறகு முன் பாரனை செய்தல் விதியன்று.

## சில முக்கிய விரதங்கள்.

### வெள்ளிக்கிழமை விரதம்

சுக்கிரவார விரதம் என்னும் வெள்ளிக்கிழமை விரதம் தனித்தனியே அம்பிகை, விநாயகர், முருகன் ஆகிய மூவருக்குமுரிய விரதங்களாக வெவ்வேறு காலங்களில் ஆரம்பித்து அநுஷ்டிப்பனவாகக் கூறப்படுகின்றன.

விநாயகப் பெருமானை வேண்டி நினைத்தகாரிய சித்திக்காகவும், தடைநீக்கத்துக்காகவும் வெள்ளிக் கிழமைதோறும் அநுஷ்டிக்கப்படுவது இந்த விரதம். வைகாசி மாத வளர்பிறையில் வரும் முதலாவது வெள்ளிக்கிழமையில் இவ்விரதம் ஆரம்பிக்கப்படவேண்டும்.

கந்த சுக்கிரவாரவிரதம் ஐப்பசிமாத முதல் வெள்ளியில் ஆரம்பிக்கப்படவேண்டும்.

உமா சுக்கிரவாரம் சித்திரைமாத வளர்பிறைமுதல் வெள்ளியில் ஆரம்பிக்கப்படவேண்டும்.

இரவு ஒருநேரம் பால்பழம் அல்லது பலகாரம் உட்கொள்வது நன்று. இயலாதவர்கள் பகல் ஒருநேர உணவு உண்டு விரதமிருக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுவாக வெள்ளிக்கிழமையை ஒரு புனிதமான தினமாக - வழிபாட்டு நாளாக - இந்துக்கள் அனைவரும் கொள்கின்றனர். இந்நாளில் மச்ச மாமிச போசனங்களை விலக்கி வீடு வாசல்களைக் கழுவித் தாமும் நீராடித் தூய்மையுடன் தமது இஷ்டதெய்வங்களை வழிபட்டு விரதமிருப்பர்.

ஐப்பசி வெள்ளி மிகவும் முக்கியமானதாகும் இந்தநாட்களில் எல்லா ஆலயயங்களிலும் விசேஷ அபிஷேகம் திருவிழா முதலியன நடைபெறும். பலரும் ஐப்பசி வெள்ளி விரதமிருந்து ஆலயதரிசனம் செய்வர்.

## அமாவாசை, பௌர்ணமி

இவ்விரு திதிகளும் பிதிர்களுக்குரியவை. பௌர்ணமியை தாயாருக்கும், அமாவாசையைத் தந்தையாருக்கும் உரியனவாகக் கூறுவர். சந்திரன் மாதுரு காரகன்: சூரியன் பிதுரு காரகன். அதனால் இவ்விதம் கூறப்படுகிறது. (மாதுரு-தாய், பிதுரு-தந்தை)

அமாவாசையைப் பிதிர்களுக்குரியதாக சாஸ்திரங்கள் பகரும். பௌர்ணமியையும் கொள்வது வழக்கில் வந்தது. மாதந்தோறும் இந்தவிரதங்களை அநுஷ்டிக்க முடியாதவர்கள் சித்திரா பௌர்ணமி, ஆடி அமாவாசை ஆகிய நாட்களில் விரத மிருப்பர். ஆடி அமாவாசையில் கடல் தீர்த்தமாடித் தர்ப்பணம் செய்வர்.

## சதுர்த்தி விரதம்

சதுர்த்தி விரதம் விநாயகருக்குரியது. ஆவணிமாத விநாயக சதுர்த்தி சிறப்பானது.

மாதந்தோறும் வளர்பிறைச் சதுர்த்தியில் விநாயகரை வேண்டி விரதமிருப்பர். இந்நாளில் விநாயகர் ஆலயங்களில் விசேஷ உற்சவங்கள் நடைபெறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதந்தோறும் வரும் தேய்பிறைச் சதுர்த்தி சங்கட ஹர கணபதி விரதம் என்ற பெயரில் அநுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

மாதந்தோறும் சதுர்த்தி விரதமிருக்க விரும்புவோர் ஆவணிச் சதுர்த்தியிலே பூஜைவழிபாடுகளுடன் சங்கல்ப பூர்வமாக ஆரம்பித்து முறைப்படி தவறாமல் தொடர்ந்து கைக்கொள்ள வேண்டும். இருபத்தொரு வருடம் விரதமிருப்பது நன்று. இயலாதெனின் ஏழுவருடங்கள் அநுஷ்டிக்கலாம். அல்லது இருபத்தொன்றுக்குக் குறையாமல் மாத சதுர்த்தி விரதமிருந்து அதையடுத்துவரும் ஆவணிச் சதுர்த்தியில் நிறைவு செய்யலாம்.

## பிரதோஷ விரதம் (திரயோதசி)

மாலைப்பொழுது என்னும் கருத்தையுடைய பிரதோஷம் என்ற சொல்லால் அழைக்கப்படும் இவ்விரத வழிபாடும் மாலை நேரத்துக்குரியதே. சூரிய அஸ்தமனத்துக்கு முன் பிற்பகல் சுமார் நாலரை மணியிலிருந்து இரவு ஏழரை மணி வரையிலான மூன்று மணித்தியாலம் சிவபிரானை விசேஷமாக வழிபடுவதே இவ்விரதத்தின் முக்கியமான அம்சமாகும். சனிப்பிரதோஷ விரதம் மிக விசேஷமானது.

கடன், வறுமை, நோய், துர்மரணம், பயம் இவற்றைப் போக்க வல்லது இது. முக்கியமாகப் புத்திரரை விரும்புவோர் இவ்விரதமிருப்பது வழக்கம்.


இவ்விரத நாளிலே நித்திய கர்மானுஷ்டானங்கள் முடித்து பகல் முழுவதும் போசனம் இல்லாமல் இருந்து மாலை நாலரை மணிக்கு முன்னதாக ஸ்நானம் செய்து சாயம் சந்தியாவந்தனம், சிவபூஜை முதலியவற்றைச் செய்த பின் வெள்ளை ஆடைதரித்துச் சிவாலயம் சென்று சிவதரிசனம் செய்து பிரதோசஷ பூஜையைத் தரிசித்துப் பிரார்த்தனை செய்ய வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதோஷ காலத்தில் சிவாலயத்தில் பிரதக்ஷிணம் செய்து வழிபடுவதற்கென்று சிறப்பான விதிமுறையொன்று ஆகமங்களில் விதிக்கப்பட்டுள்ளது. இவ்விதியை ஆறுமுக நாவலரவர்கள் இரண்டாம் சைவ வினாவிடையில் பின்வருமாறு தெரிவிக்கிறார்.

"இடபதேவரை முதலில் வணங்கி அங்கிருந்து இடமாகச் சென்று சண்டேஸ்வரரைத் தரிசித்தபின் சென்ற வழியே திரும்பி வந்து மீண்டும் இடபதேவரை வணங்கி வலமாகக் கோமுகைவரை சென்று மீண்டும் திரும்பி வந்து இடபதேவரை வணங்கி மறுபடி இடமாகச் சென்று சண்டெஸ்வரரை வணங்கித் திரும்பி வலமாகக் கோமுகைவரை சென்று (இத்தடவை இடபதேவரைத் தரிசியாது செல்ல வேண்டும்.) மறுபடி அங்கிருந்து திரும்பி இடபதேவரைத் தரிசியாமல் இடமாகச் சென்று சண்டேஸ்வரரை வணங்கித் திரும்பி வந்து இடபதேவரைத் தரிசித்து அவரது இரண்டு கொம்புகளின் நடுவே சிவலிங்கப் பெருமானைத் தரிசித்துப் பிரணவத்தோடு கூட "ஹர ஹர" என்று சொல்லி வணங்க வேண்டும். பிரதோஷ காலத்தில் கோமுகையைத் தாண்டக் கூடாது என்பதே முக்கிய விதியாகும்.



இவ்வாறு ஆலய வழிபாடு செய்தபின் வீடு திரும்பிப் பிரதோஷ காலம் முடிந்த பிறகு (இரவு ஏழரை மணிக்கு மேல்) சிவனடியார்களுடன் போசனம் செய்ய வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதோஷ காலத்தில் சிவனுக்கும் நந்தியெம் பெருமானுக்கும் காப்பரிசி நிவேதனம் செய்து அன்பர்களுக்கு விநியோகிக்க வேண்டும். காப்பரிசி என்பது பச்சரிசியையும் பயற்றம் பருப்பையும் நீரில் நன்கு நனைய வைத்து வடித்தெடுத்து அதற்குச் சர்க்கரையும் தேங்காய்ப்பூவும் சேர்த்துக் குழைத்துச் (உப்புச் சேராமல்) செய்வதாகும். இதனையே பிரதோஷ விரதத்துக்கு உணவாகக் கொள்ள வேண்டும். இது இயலாதவர்கள் சர்க்கரைச் சாதத்தை நிவேதனம் செய்து உண்ணலாம்.

பிரதோஷ காலத்தில் எவராயினும் எண்ணெய் தேய்த்தல், குளித்தல், போசனம் செய்தல், தூங்குதல் முதலியன செய்தலாகா. இவ்வேளையில் மந்திரஜபம், நூல்படித்தல் என்பனவும் செய்யாது மௌன விரதியாய் இருக்குமாறு புராணங்கள் விதிக்கின்றன.

சித்திரை, வைகாசி, ஐப்பசி, கார்த்திகை என்ற நான்கு மாதங்களுள் ஒன்றில் சனிக்கிழமையில் பிரதோஷம் வரும் நாளாகப் பார்த்து இவ்விரதம் ஆரம்பிக்கப்படவேண்டும். ஒரு வருட காலம் இந்தப் பிரதோஷ விரதத்தைக் கைக்கொண்ட பின் முறைப்படி விரதோத்யாபனம் செய்யலாம்.

## வரலட்சுமி விரதம்

வரலக்ஷ்மீ விரதம் ஆவணிமாத பௌர்ணமிக்கு முந்திய வெள்ளிக்கிழமையிலே அநுஷ்டிக்கப்பட வேண்டியது.

முன்பு குண்டினம் என்ற நாட்டிலே சாருமதி என்ற சுமங்கலிப் பெண் இருந்தாள். அவள் நல்ல தெய்வ பக்தியும் தூய்மையும் ஆசார அநுஷ்டானமும் உடையவளாக இருந்தாள். ஒருநாள் அவள் கனவிலே வரலக்ஷ்மிதேவி தோன்றி இந்த விரதத்தை உபதேசித்து மறைந்தாள். அவளும் உடனே சகல பெண்களையும் அழைத்து இப்புதுமையைக் கூறினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறித்த விரத நாளிலே சகல பெண்களுமாக நகர்முழுவதும் அலங்கரித்து முறைப்படி இவ்விரதமநுஷ்டித்து வரலாயினர். என்றுமில்லாதவாறு அங்கு சகல செல்வமும் பொலிந்து விளங்கிற்று.

நன்கு தூய்மையாக்கி மாவிலை தோரணங்களாலே அலங்கரித்த மண்டபநடுவிலே மேடையொன்றில் நெல், அரிசி முதலியவற்றை முறைப்படி பரப்பித் தாமரைக் கோலத்தை அதன்மேல் இட்டுக் கும்பத்தை அதன்மீது வைக்க வேண்டும். ஏனைய பூஜைகளுக்கு நீர் நிரப்பிய கும்பம் வைப்பது வழக்கம். ஆனால், வரலக்ஷ்மீ விரதபூஜைக்குப் பச்சரிசியால் நிரப்பப்பட்ட கும்பத்தை வைக்க வேண்டும்.

நல்ல கழிநூலிலே மஞ்சள் தோய்த்து ஒன்பது இழைகள் கொண்டதாக முறுக்கி எடுத்து ஒன்பது முடிச்சுகளை முடிந்து இந்தக் காப்பினை கும்பத்தில் வைத்துப் பூஜையை ஆரம்பிக்கலலாம்.

வழக்கம்போல சங்கல்பபூர்வமாக புண்ணியாகவாசனம் முதலிய பூர்வாங்க பூஜைகளுடன் விசேஷ உபசாரபூஜை முதலியன செய்து ஒன்பது நாமங்களால் நூலிலுள்ள ஒன்பது முடிச்சுகளையும் பூஜித்து அதனை வலது கையில் கட்டிக்கொள்ள வேண்டும். பொதுவாகக் காப்புக் கட்டும் போது ஆண்கள் வலது கையிலும் பெண்கள் இடது கையிலும் கட்டுவது வழக்கம். ஆனால் வரலக்ஷ்மீ பூஜைக்கு மட்டும் - இது பெண்களுக்குரிய விரதம். வலதுகையிலேயே காப்புக் கட்டிக்கொள்ள வேண்டும்.

விசேஷ நெய்வேத்தியமாக நெய்யுடன் கூடிய ஹவிஸ் (நெய்ச்சாதம்) சொல்லப்பட்டிருக்கிறது. வரலக்ஷ்மீ பூஜைக்குரிய விசேஷ அர்ச்சனைப் பொருள் அறுகு.

உபவாசம் போன்று கடுமையான விதிமுறைகள் இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரதத்துக்கில்லை. மத்தியானம் ஒரு நேரம் போசனம் செய்யலாம். இரவு பலகாரபட்சணங்கள் ஏதாவது உட்கொள்ளலாம். ஒன்பது வருடங்கள் தொடர்ந்து அநுஷ்டித்தபின் விரதோத்யாபனம் செய்யலாம்.

## கிருஷ்ண ஜெயந்தி (கோகுலாஷ்டமி)

ஆவணி மாதத்துக் கிருஷ்ணபட்சத்து அஷ்டமித்திதியும் ரோகிணி நட்சத்திரமும் இணைந்துவரும் இரவுப்பொழுது ஸ்ரீகிருஷ்ண ஜயந்தியாகும். ஸ்ரீஜயந்தி, கிருஷ்ணஜெயந்தி, கோகுலாஷ்டமி, ஜன்மாஷ்டமி என்று பல பெயர்களால் குறிக்கப்படும் இந்த விரதமானது ஸ்ரீகிருஷ்ணனின் பிறந்தநாள் விழாவாகக் கொண்டாடப்படுகிறது இது ஏனைய விரதங்களைப் போல கடும் விரதமாக இல்லாமல், நம்வீட்டுக் குழந்தையொன்றின் பிறந்தநாள் கொண்டாட்டம் போலவே கொள்ளப்படுகிறது.

கம்சன் என்ற கொடிய அரசனைக் கொன்றொழிப் பதற்காகவும், பூமிதேவியின் பூபாரம் குறைத்தருளும் நோக்கில் துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனம் செய்வதற்காகவும் (தீயோரைக் கொன்றொழித்து நல்லோரைக் காத்தல்) பாரதப் போரை நிகழ்த்திப் பாருக்கு நல்லருள் கூட்டவும், பார்த்தனுக்குச் சாரதியாக வந்து பகவத்கீதையை அருள்வதற்காகவும் மஹாவிஷ்ணுவின் தசாவதாரங்களுள் ஒன்பதாவது அவதாரமாக வந்தமைந்ததே கிருஷ்ணாவதாரமாகும்.

கம்சன் என்ற அசுரத்தன்மையுள்ள கொடிய அரசனின் சகோதரி வயிற்றில் அவனுக்கு மருமகனாகப் பிறந்து (தேவகீ வசுதேவர் தம்பதிகளுக்கு) அர்த்த ஜாமத்தில் இடம்மாறி இடைக்குலத்தில் பலராமன் தம்பியாக யசோதா - நந்தகோபன் தம்பதியின் குழந்தையாகத் தவழ்ந்தவன் கண்ணன்.

இல்லங்களைத் தூய்மையாக்கி நன்கு அலங்கரித்து வாசற்படியிலிருந்து சுவாமி அறைவரை குழந்தையின் காலடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடையாளங்களை உள்நோக்கியவாறு மாக்கோலத்தினால் தரையிலே இட்டுவைப்பர், பகல்முழுதும் உபவாசமும் இரவு நித்திரை விழிப்பும் மறுநாள் உதயத்தில் பாரணையும் சொல்லப் பட்டிருக்கின்றன. இயலாதவர்கள் மத்தியானம் ஒருநேர உணவும், மாலையில் பூஜை முடிந்தபின் நிவேதனப் பொருட்களையும் உண்டு இவ்விரதத்தைக் கைக்கொள்ளலாம்.

பகவத்கீதையைப் பாராயணம் செய்வது நன்று. நாவற்பழமும், வெள்ளரிப்பிஞ்சும் பாலகிருஷ்ணனுக்கு விசேஷ நிவேதனமாகச் சொல்லப்பட்டுள்ளன. இவற்றுடன் கண்ணனுக்குப் பிரியமான அவல், பால்பாயாசம், தயிர், வெண்ணெய் முதலியனவும் அறுசுவை உணவும் படைத்து வழிபடலாம்.

## நவராத்திரி விரதம்

புரட்டாதி மாத சுக்லபக்ஷப் பிரதமை முதல் நவமியீறாகவரும் ஒன்பது நாட்கள் அநுஷ்டிக்கப்படும் இந்த அற்புதமான விரதம் தேவி விரதங்களுட் சிறந்த ஒன்றாகும்.

கிருதயுகத்திலே வாழ்ந்து வந்த சுகேது மன்னனும், சுதேவி என்ற அவன் மனைவியும், தாயாதிகளுடனான போரில் நாடு நகரிழந்து வனம் புகுந்தனர். அங்கு மிகுந்த மனவருத்தத்தனிருந்த இவர்களை ஆங்கீரச முனிவர் கண்டு ஆறுதல் சொல்லி நவராத்திரி விரதத்தை உபதேசித்தார். அவர்களிருவரும் முறைப்படி இவ்விரதத்தை அநுஷ்டித்து வந்தனர். அதன் பயனாக அவர்களுக்கு சூரியப்பிரதாபன் என்ற மகன் பிறந்தான். அவன் கல்வியறிவிலும் போர்ப் பயிற்சியிலும் சிறந்து விளங்கிப் படை திரட்டிச் சென்று பகைவரை வென்று தந்தையின் ஆட்சியை மீண்டும் கைப்பற்றிப் பெற்றோரை மகிழ்வித்தான்.

நவராத்திரி வழிபாடு சக்தி மகிமையை விளக்குவது, மனிதனின் முக்கிய தேவைகளான கல்வி, செல்வம், வீரம் இம்மூன்றையும் வேண்டி அவற்றுக்கு அதிபதிகளான சரஸ்வதி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லக்ஷ்மி, துர்க்கா பரமேஸ்வரி என்ற மூன்று சக்தி அம்சங்களையும் வழிபடுவதே இவ்விரதத்தின் நோக்கம்.

முதல் மூன்று நாட்களிலும் வீரத்தையும், தைரியத்தையும் வேண்டி தூக்கையை - பராசக்தியை வழிபடவேண்டும். அடுத்த மூன்று நாட்களும் செல்வத்தை வேண்டி மஹாலக்ஷ்மியை வழிபட வேண்டும். இறுதி மூன்று நாட்களும் கல்வி, அறிவு, சகல கலை ஞானங்கள் என்பவற்றை வேண்டிச் சரஸ்வதி தேவியை வழிபட வேண்டும்.

நவராத்திரி நாட்கள் முழுவதும் மூன்று தேவியரையும் - ஏன் எல்லா சக்தி அம்சங்களையும் ஒருமித்துப் போற்றி வழிபடுவதே நல்லது. ஆலயங்களில் வைக்கப்படும் நவராத்திரி கும்பத்தில் ஒன்பது நாட்பூஜைகளிலும் துர்க்கா, லக்ஷ்மி, சரஸ்வதி மூவருக்கும் சேர்த்துப் பூஜை நிகழ்வதைக் காணலாம். இதனை சமஷ்டி பூஜை என்பர்.

கும்பம் வைத்தல் என்பது ஏனைய விரதம், பூஜைகளுக்கும் பொதுவானதெனினும், நவராத்திரியில் இது முக்கியமான அம்சம். 'கும்பபூஜை' என்றே நவராத்திரி பூஜையைச் சிறப்பித்துச் சொல்வர்.

ஆலயங்களில் தேவியை அழகுபடுத்தப்பட்ட வசந்த மண்டபத்தில் கொலுவீற்றிருக்கச் செய்து ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விதமாக அலங்கரிப்பர். ஒன்பதாம் நாள் இரவு விசேஷ பூஜை, அக்னிகாரியம், பலிதானம் என்பன நிகழும். சில இடங்களில் மகிஷாசுரவதம் நடத்தப்படும். பத்தாம் நாட்காலையில் (விஜயதசமியன்று) கும்பத்தை உத்வாசனம் செய்வர். இதனைக் கும்பம் சரித்தல் என்று சொல்வர். அம்மன் ஆலயமானால் இக்கும்ப நீரை மூலமூர்த்திக்கு அபிஷேகம் செய்வர். வேறு ஆலயங்களானால் தீர்த்தக் கிணற்றிலோ, ஆற்றிலோ, கடலிலோ ஊற்றிவிடுவது வழக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிஷாசுரவதம், வன்னி வாழை வெட்டுதல் என்பன புராணக்கதைகளை நினைவூட்டும் வகையில் நடத்தப்பெறும் நிகழ்ச்சிகளாம். மகிஷாசுரன் மட்டுமல்லாமல் பண்டாசுரன், மது கைடபர்கள், சும்ப- நிசும்பர்கள் முதலிய மற்றும் பல அசுரர்களை அம்பிகை கொன்றொழித்த கதைகள் தேவீபாகவதம், தேவீ மஹாத்மியம் போன்ற நூல்களிலும் புராணங்களிலும் உரைக்கப்படுகின்றன.

விஜயதசமி நாளில் வன்னி வாழை வெட்டுவது பற்றிச் சிறிது சிந்திக்கலாம். பண்டாசுரனை ஒன்பது தினங்களிலும் அழிக்க முடியாமல் சிவபிரானுடைய அருள் பெற்றுத் தேவி பத்தாம் நாளில் வதம் செய்தாள் என்ற கதையின்படி அதனை நினைவூட்டவே வாழை வெட்டப்படுவதாகவும் கொள்ளலாம். விஜயதசமியில் வன்னிமரத்தை வழிபாடு செய்யும் வழக்கமொன்று உண்டு. ஒரு சமயம் உமாதேவி களைப்புற்றபோது இந்த மரத்தடியில் இளைப்பாறினாளாம். இராமன் சீதையைத் தேடிப் புறப்படும் போது வன்னிமரத்தை வலம்வந்து வணங்கிய பின் புறப்பட்டதாகவும் சொல்வார்கள்.

பாண்டவர்கள் அஞ்ஞாத வாசத்தின் போது தங்கள் ஆயுதங்களை ஒரு வன்னி மரத்தில் மறைத்து வைத்திருந்ததாகவும் சொல்வர். எனவே ஆயுத பூஜை - நற்காரியம் ஆரம்பிக்கும் விஜயதசமி நாளுக்கும் வன்னிமரத்துக்கும் ஏதோ ஒரு தொடர்பு நெடுங்காலமாக இருந்து வந்திருக்கிறது. அதனால் தான் மானம்பூ உற்சவத்தில் வன்னி மரக்கிளையொன்றை வாழை மரத்தில் கட்டி வைத்து அதனைப் பூஜித்து - வாழை வெட்டு நிகழ்த்துகிறார்கள்.

வீடுகளில் நவராத்திரி பூஜையை ஆனந்தமான ஒரு கொண்டாட்டமாகவே கொள்வர். தூய்மையுடனும், அழகுப் பொலிவுடனும் திகழும் கொலுமண்டபத்தை அமைத்து முறைப்படி கும்பத்தை ஸ்தாபிக்க வேண்டும். சக்தி கும்பத்தை மண்குடத்தில் வைத்துச் சுற்றிவர மண்பரப்பி அதிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவதானியங்களிட்டு முளைக்கவிடுவது பல இடங்களில் வழக்கமாக உள்ளது. இந்த நவதானியத்தின் செழிப்பைத் தமது குடும்ப வளத்தின் நன்மை தீமைகளை அறியும் சகுனமாகக் கொள்வார்கள்.

வீடுகளில் கொலுவைத்தல் நவராத்திரியின் விசேஷ அம்சமாகும். படிப்படியாக அமைக்கப்பட்ட விசேஷமான பீடங்களில் அல்லது மாடிப்படிகளில் விதவிதமான பொம்மைகளை அழகாக அடுக்கிவைத்து அலங்கரித்து இக்கொலு அமைக்கப்படுகிறது. 5, 7, 9 என ஒற்றைப்படையாகப் படிகளின் எண்ணிக்கை இருக்க வேண்டும். அருகிலேயே கும்பம் வைத்து, சுவாமிப்படங்களையும் மாட்டி அணையா விளக்குகள் ஏற்றி ஒன்பது நாட்களிலும் விதவிதமான பட்சணங்களை நைவேத்தியம் செய்து பூஜித்தல் முறை. முக்கியமாக அவல், கடலைச்சுண்டல் என்பன நவராத்திரியில் அம்பிகைக்கான விசேஷ நிவேதனங்களாம். நாவற்பழம், கற்கண்டு முதலியனவும் வெற்றிலை, பாக்கு, பழவகை, தேங்காய் என்பனவும் படைக்கப்படும்.

சுமங்கலிப் பெண்களை இவ்விரத நாட்களில் வீட்டுக்கு அழைத்து அவர்களைப் பராசக்தியாகப் பாவித்துக் கொலுவின் அருகில் அமரச் செய்து வணங்கி மஞ்சள், குங்குமம், பட்டு, நாணயம், தாம்பூலம் என்பவற்றை வழங்குவர். 'கொலுவுக்கு அழைத்தல்' என இதனைக் கூறுவர்.

நவராத்திரியின் ஒன்பதாம் நாளாகிய மஹாநவமியன்று சரஸ்வதி பூஜை என்றும், கலைமகள் விழா என்றும் சிறப்பித்துக் கூறப்படுவதுடன் ஆயுத பூஜை என்றும் கூறப்படுகிறது. கல்விக்கூடங்களிலும் கலைக்கூடங்களிலும், தொழிற்சாலைகளிலும் இத்தினம் மிகுந்த பயபக்தியுடனும், அதேநேரம் ஆனந்த கோலாகலத்துடனும் கொண்டாடப்படுகிறது.

புத்தகங்கள் சரஸ்வதி தேவியின் உறைவிடம். கலைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருட்கள், இசைக் கருவிகள், தொழிற் கருவிகள் முதலிய ஆயுதங்களுக்கும் அதிபதி அவளே. இதனால் மஹாநவமியாகிய ஒன்பதாம் நாள் இவற்றைப் பூஜையில் வைத்து வழிபடுவர். அதுமட்டுமல்லாமல் அத்தினத்தில் இவற்றைப் பயன்படுத்துவதும் தவிர்க்கப்படுகிறது. அதாவது வாசிப்பது, எழுதுவது, கருவிகளைப் பயன்படுத்தித் தொழில் செய்வது, இசைக்கருவிகளை இசைப்பது, ஆயுதங்களைப் பயன்படுத்துவது என்பனயாவும் அன்று கைவிடப்பட்டு உபவாசம், பூஜைவழிபாடுகள் பிரார்த்தனைகள் முதலிய இறைபணிகளே செய்யப்பட வேண்டும். பஜனைகளைப் பாடுவது, அதில் இசைக்கருவிகளைப் பயன்படுத்துவது என்பன பற்றிச் சிலருக்கு ஐயமேற்படலாம். ஆனால் அவை குற்றமல்ல, சொந்த லாபத்துக்காக அவற்றைப் பயன்படுத்தாமல் அம்பிகையின் வழிபாட்டுக்கே பயன்படுத்துவதால் அது சரியானதே.

நவராத்திரி காலத்தில் எண்ணெய் தேய்த்து முழுகுதல் விலக்கப்பட்டுள்ளது. ஊசி நூல்கொண்டு பழந்துணி தைப்பதும் கூடாது. புரட்டாதிச் சனி விரதம் இந்த நவராத்திரி நாளினுள்வரும்போது எண்ணெய் தேய்க்காது நீராடி அந்த விரதத்தையும் கைக்கொள்ளலாம். எள்ளெண்ணெய் எரித்து வழிபடுதலும் செய்யலாம்.

நவராத்திரி விரதத்தை முறையாகக் கைக்கொள்ள விரும்புவோர் முதலெட்டு நாட்களிலும் பகலில் உணவின்றி இரவில் பூஜை முடிந்தபின் பால்பழம், பலகாரம் என்பன சாப்பிட்டு நவமியில் உபவாசமிருந்து பத்தாம் நாள் விஜயதசமியன்று காலை எட்டரை மணிக்கு முன் பாரணை செய்ய வேண்டும். முடியாதவர்கள் முதலெட்டு நாளிலும் ஒருநேர உணவுண்டு (பகல் அன்னம்) கடைசி நாளில் பால்பழம் மட்டும் கொள்ளலாம்.

விஜயதசமியன்று காலை அறுசுவை உண்டி சமைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனை நிவேதித்து விசேஷ பூஜை செய்தபின் நாட்படிப்பு நாட்கருமங்களை ஆரம்பித்தபின் பாரணை செய்வதே முறை. ஒன்பது வருடங்கள் தொடர்ந்து இவ்விரதம் அநுஷ்டித்தபின் விரதோத்யாபனம் செய்யலாம்.

## கேதாரேஸ்வர விரதம் (கேதாரகௌரி விரதம்)

ஐப்பசி மாதத்துத் தீபாவளி அமாவாசையில் முடிவுறும் இருபத்தொரு நாள் விரதம் இது. பெரும்பாலும் புரட்டாதி மாத வளர்பிறை தசமியில் (விஜயதசமி) ஆரம்பமாகும். கேதார கௌரி விரதம் என்ற பெயரால் அழைக்கப்படும் இவ்விரதம் அம்பிகையை நோக்கி அநுஷ்டிக்கப்படும் சக்தி விரதம் என்ற தப்பபிப்பிராயம் இவ்விரதத்தின் பெயர்க் காரணமாகப் பலரிடையே நிலவுவதுண்டு. திருக்கேதார நாதராகிய கேதாரேஸ்வரப் பெருமானை அத்தலத்து நாயகியாகிய கேதார கௌரி அம்பாள் பூஜித்து வழிபட்ட விரதமாகையால் இவ்விரதத்துக்கு இப்பெயர் வந்தது. இது உண்மையில் சிவலிங்கப்பெருமானைக் கருதி அநுஷ்டிக்கும் ஒரு சிவ விரதமாகும்.

முன்பொரு சமயம் திருக்கைலாயத்திலே வசந்த மண்டபத்திலே பார்வதி சமேதராகப் பரமசிவன் வீற்றிருக்கும் போது இந்திராதி தேவர்களும், முனிசிரேஷ்டர்களும் கூடி நின்று தரிசித்தனர். நாரதர் முதலியோரின் இன்னிசையும், ஊர்வசி முதலிய தேவலோக நாட்டியப் பெண்களின் நடனமும் நடைபெற்றன.

அப்போது சிவபக்தரான பிருங்கிமுனிவரும் அங்கு வந்திருந்து ஆனந்த மயமான ஒரு விகடக் கூத்தினை ஆடிக் காட்டினார். இதன் பின் தீவிர சிவபக்தரான அம்முனிவர் பார்வதியை விட்டுச் சிவனை மட்டும் தனியாக வலம் வந்து வணங்கினார். இதைக் கண்டு வியப்புற்ற பார்வதி பரமசிவனிடம் அதன் காரணத்தை வினவினார். அதற்கு அவர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சிவத்திற்கும் சக்திக்குமுள்ள உறவு உயிருக்கும் உடலுக்கும் உள்ள உறவு போன்றது. தேகப்பற்றை நீக்கி அதிபக்குவமடைந்தவர்கள் உடலைப்பற்றிக் கவலைப்படுவதில்லை. அக்கருத்தினால் - உயிர் விஷயத்தில் மட்டும் பற்றுள்ளவராதலால் - சக்தி பற்றிய அக்கறையின்றி உயிராகிய சிவத்தை மட்டும் வழிபடுவாராயினார்" என்று விளக்கமளித்தார்.

"அப்படியானால் இந்தப் பிருங்கி முனிவருக்குத் தேகவலுவாகிய சக்தி எதற்கு? " என்றெண்ணிய அம்பிகை அவரது உடல் வலிமையையும் ஊண் உதிரப் பசையையும் முற்றாக விலக்கி விட்டார். அவர் வெறும் எலும்பும் தோலுமாகி, இயங்கும் ஆற்றலின்றித் தடுமாறினார். அவர் மீதிரங்கிய சிவபிரான் அவருக்குத் தண்டொன்று கிடைக்கச் செய்தார். அதனை ஊன்றி ஒருவாறு இயங்கலானார் பிருங்கிமுனிவர்.

அக்கணமே அவ்விடம் விட்டகன்ற பார்வதி கௌதம முனிவரது ஆஸ்ரமத்திற்குச் சென்று ஒரு வில்வமரத்தடியில் விற்றிருந்தார். அம்மையின் வரவையுணர்ந்த கௌதம முனிவர் அங்கு வந்து தரிசனம் செய்தார். அம்பிகை அவரை நோக்கி "யாம் பரமேஸ்வரனோடு ஒரே உருவில் சரிபாதியாய்ப் பொருந்த வேண்டும். அதற்குரிய ஒரு நோன்பினை நான் நோற்க வேண்டும்." என்று தம் விருப்பத்தைத் தெரிவித்தார்.

முனிவர் கேதார கௌரி விரதத்தைப் பார்வதிக்கு எடுத்துரைக்கப் பார்வதியும் முறைப்படி அவ்விரதம் கைக்கொண்டு பரமேஸ்வரனது இடப்பாகம் பெற்று மகிழ்ந்தார்.

உஜ்ஜயினி என்ற நாட்டு மன்னர் வச்ரதந்தன் என்பவன் சித்திராங்கதன் என்ற சிவபக்தன் வாயிலாக இவ்விரத மகிமையை அறிந்து. அநுஷ்டித்து பேறு பெற்றான். இவ்விரதத்தைக் கேள்வியுற்ற புண்ணியவதி, பாக்கியவதி என்ற இரு சகோதரிகளும் இவ்விரதத்தை முறைப்படி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைக்கொண்டு இரு அரச குமாரர்களை மணந்து இனிது வாழ்ந்தனர்.

இவர்களுள் பாக்கியவதி தனது செல்வச் செருக்கினால் இவ்விரதத்தை மறந்து கைவிட்டவளானால். இதனால், இவள் கணவனாகிய அரசகுமாரன் பகையரசர்களாற் தோற்கடிக்கப்பட்டு விடவே இவர்கள் நாடு கடத்தப்பட்டனர். அங்கு ஓர் ஓலைக்குடிசையில் கஷ்ட ஜீவனம் நடத்தி வந்தனர். இந்நிலையில் தன் கழுத்திலிருந்த நோன்புக் கயிற்றைக் கவனமில்லாமல் அறுத்து வீச அது முற்றத்திலிருந்த அவரைக் கொடிப் பந்தரில் வீழ்ந்தது.

புண்ணியவதியோ தொடர்ந்து இந்தக் கேதாரகௌரி நோன்பைக் கைக்கொண்டு செல்வச் சுகத்துடன் வாழ்ந்து வந்தாள். பாக்கியவதி தனது கஷ்ட நிலையைத் தெரிவித்துப் புண்ணியவதியிடம் ஆள் அனுப்பி உதவி கோரினாள். பாக்கியவதி நோன்பைக் கைவிட்டதனால் தான் இக்கதி நேர்ந்ததென உணர்ந்த புண்ணியவதி அவளுக்கு வேண்டிய உதவிகள் செய்ததோடு விரதத்தை மறுபடி கைக்கொள்ளுமாறு ஆலோசனையும் கூறி அதற்கான வழிவகைகளும் செய்து கொடுத்தாள்.

தன்வீட்டு முற்றத்திலிருந்த அவரைக்கொடி தான் வீசிய நோன்புக்கயிறு காரணமாக மிகவும் செழித்து வளர்ந்து அளவுகணக்கின்றிக் காய்த்து நிற்றலைக் கண்டு. நோன்புக் கயிற்றின் பெருமையை உணர்ந்த பாக்கியவதி கேதாரகௌரி விரதச் சிறப்பையும் தெரிந்து கொண்டாள். தான் செய்த தவறுக்கு மனம் வருந்திச் சகோதரியின் சொற்படி மீண்டும் விரதமிருந்து அதன் மூலம் மீண்டும் தமது இராச்சியத்தையடைந்து மகிழ்வுற்றிருந்தாள்.

எள்ளுருண்டை, மஞ்சளுருண்டை, அதிரசம் (அரியதரம்), வாழைப்பழம், தேங்காய், வெற்றிலை, பாக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பவற்றை வகைக்கு ஒன்றாகத் தினமும் நிவேதனம் செய்ய வேண்டும். பகல் முழுவதும் பட்டினியிருந்து சாயங்காலத்தில் இந்தப் பூஜையைச் செய்தபின் நிவேதனங்களை மட்டும் உண்டு பூஜைக்குப் பயன்படுத்திய தீர்த்தத்தை அருந்தி வரவேண்டும்.

இருபத்தோரிழைகள் கொண்ட பட்டு நூல் ஒன்றை முறுக்கி லிங்கம் அல்லது கும்பத்தின் மீது வைத்துப் பூஜை முடிவில் வலம் வந்து வணங்கியபின் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு முடிச்சு இடவேண்டும். இருபத்தோராம் நாள் இக்காப்புக் கயிற்றினைத் தமது முன்கையிலோ புயத்திலோ, கழுத்திலோ தரித்துக் கொள்ள வேண்டும். அடுத்த வருடம் விரத நாளில் இவ்வாறு புதிய காப்புக் கயிற்றினைக் கட்டும்போது பழைய கயிறு விலக்கப்பட வேண்டும். பின்னர் இக் கயிறு, பூசித்த மண்லிங்கம் என்பவற்றைப் புண்ணிய தீர்த்தத்திலே (நீர் நிலைகளில்) விட்டுவிட வேண்டும்.

இறுதி நாளாகிய இருபத்தோராம் நாள் பூரண உபவாசமிருந்து மறுநாள் அதிகாலையில் பாரணை செய்தல் முறை. இருபத்தொரு நாளும் விரதமிருக்க வசதியில்லாதவர்கள் இறுதி நாளாகிய ஐப்பசி மாத அமாவாசை நாளாகிய கேதாரகௌரி விரத நாளில் இந்த விரதமிருக்கலாம்.

இவ்விரதம் இருபத்தொரு வருடம் கைக்கொள்ளப்பட வேண்டுமென்பது சாஸ்திர விதி. இயலாதவர்கள் ஏழு வருடமாவது அநுஷ்டிக்க வேண்டும்.

ஐந்து மாதத்துக்கு மேற்படாத கர்ப்பிணிப் பெண்களும், மாதவிலக்கு நின்று விட்ட பெண்களும், தொடர்ந்து இருபத்தொரு நாளும் இவ்விரதம் அநுஷ்டிக்கலாம். இடையில் மாதவிலக்கு நேரக் கூடுமாயின் ஏனைய பெண்கள் இறுதி 9, 7, 4, 3, நாட்கள் கைக் கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்பதிகளுக்கு மகிழ்ச்சியான இல்லற வாழ்வும், நன்மக்கட்பேறும் கன்னியர்க்கு நன்மணப் பேறும், இவ்விரத பலனாகும்.

## ஸ்கந்தஷஷ்டிவிரதம்

கந்தக்கடவுளாம் சுப்பிரமணிய சுவாமிக்குரிய மூன்று விரதங்களில் மிகச்சிறந்தது ஸ்கந்தஷஷ்டி விரதம்.

ஐப்பசி மாதத்துத் தீபாவளி அமாவாசையையடுத்த வளர்பிறைப் பிரதமை முதல் ஷஷ்டியீறாகவுள்ள ஆறு நாட்கள் ஸ்கந்தஷஷ்டி விரதமாகும். சகல செல்வங்களையும், சுக போகங்களையும் தரவல்ல இந்த விரதம் புத்திரலாபத்துக்குரிய சிறப்பான விரதமாகும். "சட்டியில் இருந்தால் தானே அகப்பையில் வரும்" என்பது ஒரு பழமொழி. இதற்கு வெளிப்படையான சொற்பொருளைவிட ஸ்கந்தஷஷ்டியில் விரதமிருந்தால் அகப்பையாகிய கருப்பையிலே கரு உண்டாகும் என்ற உட்கருத்துமுண்டு.

முருகபக்தர்கள் ஒரு கடுந்தவமாகவே இவ்விரத்தைக் கருதி ஆறு நாட்களும் முழுப்பட்டினியாக உபவாசமிருத்தல் வழக்கம். முதல் நாள் அமாவாசையன்றே ஒரு நேர உணவுண்டு விரதமாக இருந்து மறுநாளைய உபவாசத்துக்குத் தயார்செய்து கொள்வர் (பொதுவாகவே உபவாசவிரதமநுஷ்டிக்கும்போது முதல் நாளும் மறுநாளும் ஒரு நேர உணவே கொள்ள வேண்டும்.

பிரதமையிலன்று அதிகாலை நீராடித் தூய ஆடையணிந்து நித்திய கர்மாநுஷ்டானங்கள் முடித்து முருகன் ஆலயம் சென்று ஆறுநாட்களும் அன்ன ஆகாரங்கள் எதுவுமின்றி இறைவழிபாடு, முருகநாமபஜனை, நாமஜபம், புராணபடனம், புராணங் கேட்டல் என்றித்தகைய புனித காரியங்களுடன் அங்கேயே தங்கியிருப்பர். தண்ணீர் கூட அருந்தாது ஆலயத்தில் வழங்கப்படும் பானகம் (பானக்கம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டும் அருந்தியிருத்தல் உத்தமோத்தமமான விரதமாகும். பானகமென்பது சர்க்கரை, தேசிக்காய், இளநீர் முதலியன கலந்து தயாரிக்கப்படும் ஒரு நீராகாரமாகும். பட்டினி கிடக்கும் வயிற்றினுள் வெளிப்படும் அதிக சக்திமிக்க வெப்பம், வாய்வு, பித்தம் இவற்றைத் தணித்து உடற்சமநிலையைப் பேணுதற்கும், பசி, தாகம் இவற்றை ஓரளவு தணிக்கவும் இது உதவுகிறது.

ஆலயங்களில் ஆரம்பதினத்திலேயே தர்ப்பையணிந்து, காப்புக்கட்டி, சங்கல்பித்து ஆறு நாளும் நோன்பிருத்தல் முறை. இறுதி நாளில் காப்பை அவிழ்த்துத் தர்ப்பையுடன் சேர்த்துத் தாம்பூல தக்ஷிணைகளுடன் அர்ச்சகரிடம் சமர்ப்பிப்பர்.

ஏழாம் நாள் அதிகாலையில் நீராடி நித்திய கர்மானுஷ்டானங்களை நிறைவேற்றிப் பாரணைப் பூஜை என்று நடைபெறும் விசேஷ பூஜையும் கண்டு வழிபட்ட பின் மாஹேஸ்வர பூஜை செய்து (அடியார்களுக்கு அன்னமிட்டு) பாரணை செய்ய வேண்டும்.

இவ்விதம் கடும் விரதம் அநுஷ்டிக்க முடியாதவர்கள் முதல் ஐந்து நாட்களும் இரவு ஒருபொழுது பால்பழம் அல்லது பலகாரம் உண்டு இறுதிநாள் உபவாசம் இருக்கலாம். அதுவும் முடியாதவர்கள் முதல் ஐந்து நாட்களும் பகல் ஒருபொழுது அன்னமும் ஆறாம் நாள் இரவு பால்பழம் அல்லது பலகாரமும் உண்டு விரதமிருக்கலாம்.

ஆறாம் நாள் ஷஷ்டித்திதியில் சூரசம்ஹாரம் முடிந்த அன்றிரவு முழுவதும் துயில் நீக்கி விழித்திருந்து முருகன் பெருமைகளையே நினைத்தும் பேசியும் வழிபட்டிருக்குமாறு பழம் நூல்கள் விதிக்கின்றன. சிவபிரானுக்குரிய சிவராத்திரியும், மஹாவிஷ்ணுவுக்குரிய வைகுண்ட ஏகாதசியும் போல முருகப்பெருமானுக்குரிய ஸ்கந்தஷஷ்டியும் மிகவிசேஷமான தினமாதலால் துயில் நீத்தல் பொருத்தமானதே. ஆயினும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைவராலும் இது கைக்கொள்ளப்படுவதில்லை. இயன்றவர்கள் கைக்கொள்க.

இவ்விரதம் ஆறு வருடங்கள் அல்லது பன்னிரண்டு வருடங்கள் தொடர்ந்து கைக்கொள்ளப்பட வேண்டும். உபவாசம் அல்லது ஒரு நேர உணவு என்பது போன்ற உணவுநியதி ஆறுவருடமும் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும். முறைப்படி சங்கல்பபூர்வமாக ஆரம்பித்து ஆறாவது வருடம் விரதமுடிவில் விரதோத்யாபனம் செய்து பூர்த்தி செய்து கொள்ளவேண்டும்.

சூரன், சிங்கன், தாரகன் முதலிய அசுரர்கள் நெடுங்காலம் தேவர், மனிதர் முதலிய யாவரையும் துன்புறுத்தி அழிவு செய்து வந்தனர். பரமசிவன் இதற்கொரு முடிவு காணும் நோக்கில் தமது சக்தியையே முருகப்பெருமானாகப் பிறப்பித்தார். அந்த முருகப்பெருமான் இந்த சூரபதுமாதி அசுரர்களுடன் ஆறு நாட்கள் போரிட்டு வென்றார். இந்த அருட்பெருங்கருணைச் செயலை வியந்து இப்போர் நிகழ்ந்த காலமாகிய ஐப்பசி மாத வளர்பிறை முதலாறு நாட்களையும் விரதநாட்களாகக் கொண்டு முனிவரும் தேவரும் நோற்று வந்தனர்.

ஆறுநாட்போரும் ஆறுபகைகளை வெல்லுதலைக் குறிக்கும். சூரன், சிங்கன், தாரகன் மூவரும் ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களையும் (பாசம்) தேவர்கள் ஆன்மாக்களையும் (பசு) முருகப்பெருமான் பரம்பொருளையும் (பதி) உணர்த்தி நிற்கின்றனர். இவ்விதம் முப்பொருளுண்மை விளக்குதலே கந்தபுராணத்தின் நோக்கமெனலாம். ஆன்மாக்களாகிய நாம் எம்மைத் துன்பத்துள் ஆழ்த்தி நிற்கும் காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாற்சரியம் ஆகிய ஆறுபகைகளையும் ஆணவாதி மும்மலங்களையும் வென்று ஆண்டவனைச் சென்றடைய வேண்டும் என்ற கருத்தையே ஸ்கந்தஷஷ்டி விரதமும் கந்தபுராணமும் வலியுறுத்துகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விநாயகஷஷ்டி விரதம் (பெருங்கதை விரதம்)

கார்த்திகை மாதத் தேய்பிறைப் பிரதமை முதல் மார்கழி மாத வளர்பிறை ஷஷ்டி வரையிலான இருபத்தொருநாள் விரதம் இது.

(ஆரம்பமும் முடிவும் முக்கியமே தவிர சிலகாலங்களில் நாடகள் குறைவதுமுண்டு.)

முதல் இருபதுநாளும் மத்தியானம் ஒருபொழுது மட்டும் போசனம் செய்யவேண்டும். இரவு பால்பழம் அல்லது பலகாரம் கொள்ளலாம். தினமும் விநாயகருக்கு இளநீர், கரும்பு, மோதகம். அவல், எள்ளுருண்டை என்பன நிதேனம் செய்து விநாயகர் சரிதம்கூறும் பெருங்கதை, விநாயகர் புராணம் முதலியவற்றைப் படித்தும் கேட்டும் விநாயகரகவல், விநாயக கவசம் போன்றவற்றைப் பாராயணம் செய்தும் வழிபாடு செய்தல் வேண்டும்.

இறுதிநாள் விசேஷ பூஜை வழிபாடுகள் செய்து உபவாசமிருந்து மறுநாள் பாரணை செய்யவேண்டும்.

இவ்விரத ஆரம்பநாளில் இருபத்தோரிழையிலான விரதக் காப்பினை ஆண்கள் வலது கையிலும் பெண்கள் இடது கையிலும் கட்டிக் கொள்வர். இவ்விரதத்துக்கும் ஸ்கந்தஷஷ்டி விரதத்துக்கும் மட்டும் விரதாரம்பத்தில் பவித்திரமணிந்து சங்கல்பம் செய்யும்போது காப்புக் கட்டும் வழக்கம் உண்டு. இக்காப்பு விரதம் முடிந்த மறுநாள் அதாவது பாரணையிலன்று காலை அவிழ்க்கப்பட வேண்டும்.

(வரலட்சுமி விரதம், கௌரிவிரதம் ஆகியவற்றுக்கு விரதமுடிவில் காப்புக் கட்டி அடுத்த வருட விரத நாளில்தான் அவிழ்ப்பது வழக்கம்.)

கந்தபுராணம், லிங்கபுராணம், உபதேசகாண்டம் ஆகியவற்றிற் காணப்படும் இவ்விரத மகிமையை பிள்ளையார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதை என்ற பெயரில் வரதபண்டிதரவர்கள் தனி நூலாகவும் செய்திருக்கிறார். இருபத்தொரு வருடம் இவ்விரதம் அநுஷ்டிக்கவேண்டும். இயலாதவர்கள் ஏழுவருடமாவது கைக்கொள்ளலாம்.

## திருவெம்பாவை (பாவைநோன்பு)

மார்கழித் திருவாதிரையை இறுதி நாளாகக் கொண்ட பத்து நாட்கள் திருவெம்பாவை நோன்பு எனப்படும். மார்கழித் திருவாதிரை நடேசரபிஷேக நாளாகவும் சிவவிரதங்களுள் ஒன்றாகவும் உள்ளது.

இத்திருவாதிரைக்கு முந்திய பத்து நாட்களும் திருவெம்பாவை விரதமாகக் கொள்ளப்படுகிறது. இது மிகப் பழைய காலத்திலிருந்து பெண்களால் அநுஷ்டிக்கப்பட்டு வரும் ஒருவிரதமாகும். ஆதியில் இது பாவை நோன்பு என்று சொல்லப்பட்டு வந்தது. மார்கழி மாதம் தேவர்களின் புலர் காலைப்பொழுது என்பதால் இம்மாதம் முழுவதுமே இறை வழிபாட்டுக்கே ஒதுக்கப்பட்டுள்ளது. பீடை மாதம் என்று கூறி ஏனைய நற்காரியங்களுக்கு எடுக்கப்படாமல் தள்ளி வைக்கப்பட்டதன் காரணம் இதுவே. பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் கீதையில் "மாதங்களில் நான் மார்கழியாக இருக்கிறேன்" என்று கூறியதிலிருந்தே மார்கழி மாதச் சிறப்பு உணரத்தக்கது.

மார்கழிமாதம் முழுவதுமே பனிக் குளிரையும் பொருட்படுத்தாது மிக அதிகாலையிலேயே எழுந்து நீராடி ஆலயம் சென்று திருவெம்பாவை, திருப்பாவை, திருப்பள்ளியெழுச்சி முதலிய பாடல்களைப் பாடி வணங்குவர். ஆலயங்களில் இம்மாதம் முழுவதும் விசேஷ அதிகாலைப் பூஜைகள் நடைபெறும்.

அக்காலத்தில் பெண்கள் நாட்டின் வளம் கருதி மழை வேண்டியும், தமது நல்வாழ்க்கைச் சிறப்புக்கருதி நல்ல கணவனை வேண்டியும் இப் பாவைநோன்பினை அனுஷ்டித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தனர். அதிகாலை துயிலெழுந்து ஏனைய பெண்களையும் பாடிப்பாடி அழைத்துக்கொண்டு கூட்டமாகக் குளத்திற்குச் சென்று நீராடி இறைபுகழ் பாடி வழிபாடுகள் நிகழ்த்தி விரதமிருந்தனர்.

இந்த வழக்கத்தையும் அவர்கள் வாயில் ஒலிக்கும் நாட்டுப் பாடல்களையும் அவதானித்த மணிவாசகப் பெருந்தகையார் திருவெம்பாவையை அருளிச் செய்தார். திருவெம்பாவை விரதநாட்கள் பத்திலும் ஆலயங்களிலும் பிற இடங்களிலும் திருவெம்பாவை, திருப்பள்ளி எழுச்சி தவிர ஏனைய திருமுறைகளை ஓதாது காப்பிட்டுவைக்கும் மரபு நம் நாட்டில் நீண்டகாலமாக இருந்துவருகிறது. திருவெம்பாவையின் சிறப்பைக் காட்டுகிறது இது.

இறைவழிபாடு செய்து நல்ல மழையையும் நல்ல கணவரையும் வேண்டிப் பெண்கள் நோற்கும் நொன்பு இது. பத்தாம் நாள் உபவாசமிருந்து பதினோராம் நாள் காலை பாரணை செய்யலாம்.

## சிவராத்திரி

சிவபரம்பொருளையே முழுமுதற்கடவுளாகக் கொண்டொழுகும் சைவர்களுக்கு மிகமுக்கியமான விரதம் சிவராத்திரியாகும். ஆன்ம லாபத்தை நாடி இம்மை மறுமை என்ற இருமைக்கும் பயன்தரும் மஹாசிவராத்திரி விரதத்தைக் கைக்கொள்ளவேண்டியது ஒவ்வொரு சைவனதும் கடமை.

மாசிமாதத் தேய்பிறைச் சதுர்த்தசியிலே சிவராத்திரி விரதம் கைக்கொள்ளப்படுகிறது.

ஒரு சமயம் படைப்புக் கடவுளாகிய நான்முகனும் காத்தற் கடவுளாகிய திருமாலும் தானே பெரியவன், தானே பெரியவனென்று தம்முள் வாதிட்டு நின்றனர். இவ்வேளை அவர்களருகே ஓர் அக்கினிப் பிழம்பு தோன்றியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இவ்வக்கினியின் அடியையாவது முடியையாவது கண்டு வருபவனே பெரியவன்" என்று ஓர் அசரீரி முழங்கியது.

உடனே பிரம்மா அன்னப் பட்சியாக மாறி வானத்தில் பறந்து முடியைத் தேடிப் புறப்பட்டார். விஷ்ணு பன்றி வடிவெடுத்து நிலத்தைத் தோண்டிக் கீழே புகுந்து அவ்வக்கினியின் அடியைத் தேடிப் புறப்பட்டார். நீண்டகாலம் முயற்சித்து முடியாமல் தோல்வி கண்டு இருவரும் திரும்பினர்.

தாம் வெறும் கருவிகளேயென்றும் தம்மை இயக்கும் ஒரு மேலான பரம்பொருள் உண்டு என்றும் அதுவே சிவபரம்பொருள் என்றும் உணர்ந்து அவ்வக்கினிக் கொழுந்தின் முன் அவர்களிருவரும் மண்டியிட்டு நின்றனர். அவர்கள் செருக்கையடக்கிய சிவபிரான் அவர்களுக்கு அருள் புரிந்ததுடன் அந்தச் சோதி வடிவம் தோன்றிய நாளை சிவராத்திரி விரத நாளாக அநுஷ்டிக்குமாறும் கூறினார்.

காட்டிற்கு வேட்டையாடச் சென்ற வேடனொருவன் வழிதப்பிப் போய், இருட்டிவிட்ட காரணத்தால் தடுமாறிக் கொண்டிருந்தான். இரவுப் பொழுதைப் பாதுகாப்பாகக் கழிப்பதற்காக ஒரு மரத்தின் மீது ஏறியிருந்தான். தான் தூங்கிவிட்டால் மரத்திலிருந்து கீழே விழுந்து ஏதாவது மிருகங்களுக்கு இரையாகிவிடலாம் என்பதால் மரத்தின் இலைகளை ஒவ்வொன்றாகப் பறித்துக் கீழே போட்டுக் கொண்டிருந்தான்.

அன்றைய தினம் சிவராத்திரி என்பதும், அவன் ஏறியிருந்த மரம் ஒரு வில்வமரம் என்பதும், கீழே இருந்த ஒரு சிறிய சிவலிங்கத்தின் மேல் அவன் பறித்துப் போட்ட வில்வமிலைகள் விழுந்தன என்பதும் அந்தப் பாமரனுக்குத் தெரியாது. ஆனால் வேட்டைதேடி அலைந்ததில் பகல் முழுவதும் உணவின்றியிருந்து இரவில் தூக்கமின்றி விழித்திருந்து சிவலிங்கத்துக்கு வில்வமிலையால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அர்ச்சித்தபடியால் அவனுக்கு முத்தியின்பம் கிட்டிற்று. அறியாமல் செய்த நற்காரியத்துக்கே இப்பேறு கிட்டிற்றென்றால் அறிந்து செயற்படும்போது கிட்டும் பேறு எவ்வளவு?

இவ்வித மகிமை பொருந்திய நாளில் முறைப்படி நித்திய கர்மாநுஷ்டானங்களைச் செய்து சிவாலயம் சென்று உபவாசமிருந்து இரவு முழுவதும் தூக்கம் ஒழித்து. சிவநாம பஜனை, பஞ்சாக்ஷரஜபம் முதலியவற்றில் ஈடுபட்டிருந்து மறுநாள் அதிகாலை நித்திய கருமம் முடித்து எட்டரை மணிக்கு முன் பாரனை செய்வது விதியாகும்.

சிவராத்திரி இரவு நான்கு யாமமும் சிவபூஜை, சிவலிங்க வழிபாடு அவசியம். நான்கு யாமப் பூஜைகளும் அவ்வக் காலத்தில் செய்வது உத்தமம். ஒரே காலத்தில் சேர்த்துச் செய்வது மத்திமம்.

இரவு சுமார் 11.30 மணிமுதல் 12.15 வரையிலான காலம் லிங்கோற்பவ காலமாகும். இரவு முழுவதும் விழித்திருக்க முடியாதவர்கள் லிங்கோற்பவ காலம் முடியும்வரையாவது விழித்திருத்தல் நன்று.


இவ்விரதம் இருபத்துநான்கு வருடங்கள் அல்லது பன்னிரண்டு வருடங்கள் அல்லது ஆறு வருடங்களாவது தொடர்ந்து அநுஷ்டித்த பின் முறைப்படி விரத பூர்த்தி செய்து கொள்ளலாம்.

## நிறைவுரை

இவ்வாறு ஆண்டு முழுவதும் அருமையான பல விரதங்கள் உள்ளன. அவற்றின் சிறப்புக்களை உணர்ந்து நமக்குரிய விரதங்களைத் தேர்ந்தெடுத்து முறைப்படி அனுஷ்டித்து நற்பேறடைவோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாவிலை தோரணம்

நமது சமய விழாக்கள் யாவற்றிலும் அலங்காரம் முக்கிய இடம் பெறுகிறது. அந்த அலங்காரங்கள் வெறுமனே கண்ணைக் கவருவனவாக இல்லாமல் பாரம்பரியப் பழக்க வழக்கங்களைப் பேணுபவையாக இருப்பதே அவற்றின் சிறப்பு.



இவ்வகையான அலங்காரங்களில் முக்கிய இடம்பெறுபவை வாழை மரங்களும் மாவிலை தோரணங்களும் நிறைகுடமும் ஆகும்.

விழா நிகழும் மண்டபத்தைச் சூழவும் கயிறு கட்டி அவற்றில் மாவிலைகளையும் தென்னங் குருத்தினால் செய்த தோரணங்களையும் தொங்கவிடுவார்கள். ஆங்காங்கே வாழை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரங்களைக் கட்டியிருப்பார்கள். இந்த இலைகள் சூழலைக் குளிர்மையாக வைத்துக்கொள்ள உதவுகின்றன. மேலும் விழாக்களின்போது பலர் ஒன்றுகூடுவதால் அங்கு உயிர்வாயுவாகிய ஒட்சிசன் குறைவடையுமல்லவா? இந்தப் பச்சிலைகளிலிருந்து வெளியேறும் உயிர்வாயு காற்றின் நச்சுத் தன்மையை அகற்றிச் சமநிலையைப் பேண உதவுகின்றது.

அதேநேரம் இவை கட்டப்பட்டிருக்கும் முறையிலிருந்து அதனைப் பார்க்கும் ஒருவர் அங்கு நடைபெறும் விழா மகிழ்ச்சிகரமானதா அல்லது அரணச்சடங்கு முதலியனவா என்பதைப் புரிந்துகொள்ளமுடியும்.

பூர்வக் கிரியை என்படும் மங்கலச் சடங்குகளில் மாவிலைகள் உட்புறமாக மடித்துச் சொருகப்பட்டிருக்கும். தோரணங்களின் குருவிகள் நான்கிற்கு மேற்பட்டவையாகவும் மேல்நோக்கியவையாகவும் இருக்கும்.

அபரக் கிரியை எனப்படும் அமங்கலச் சடங்குகளில் மாவிலைகள் வெளிப்புறமாக மடித்துச் சொருகப்பட்டிருக்கும். தோரணங்களின் குருவிகள் மூன்றாகவும் கீழ்நோக்கியும் இருக்கும்.

## நிறைகுடம்

நமது விழாக்கள் நடைபெறும் சூழலில் மாவிலை, தோரணம் அழகுசெய்வது போல விழா நடைபெறும் இடத்தில் முகப்பிலே பூரண கும்பம் எனப்படும் நிறைகுடமும் குத்துவிளக்கும் நம்மை வரவேற்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைகுடம் என்ற சொல்லிலேயே நிறைவு என்ற சொல் சேர்ந்திருப்பதைக் காண்கிறோம். பூரணத்துவம் எனும் நிறைவை உணர்த்துவதாக மங்கலப் பொலிவை எடுத்துக் காட்டுவதாக நிறைகுடம் அமைக்கப்படுகிறது. ஒரு குடம் அல்லது செம்பு நிறைய நீர் நிரப்பப்பட்டு அதன்மேல் மாவிலைகள் வைத்து அதன்மேல் தேங்காய் வைக்கப்பட்டதும் நிறைகுடம் உருவாகிவிடுகிறது. இங்கு வைக்கப்படும் மாவிலைகள் தொத்தாக வைக்கப்படுவதும் உண்டு. அல்லது நுனி சிதையாத அழகிய மாவிலைகளை ஒரே அளவினதாக ஐந்து, ஏழு, ஒன்பது என்ற ஒற்றைப்படை எண்ணிக்கையில் சேகரித்து வைப்பர்.

நிறைகுடத்தின் அருகில் குத்துவிளக்கு ஏற்றிவைக்கப்படும். தீபம் ஏற்றுதல் அல்லது மங்கல விளக்கு ஏற்றுதல் என்பது மங்கலமான செயற்பாடு. எமது உள்ளத்தில் அறியாமையைப் போக்கி அறிவை நிரப்புவதன் அடையாளமாக இருளைப் போக்கி ஒளியை வரவேற்கும் இந்த நிகழ்வு அமைகிறது.

ஒளிவீசிக்கொண்டிருக்கும் அந்த விளக்கின் அருகில் நமது பண்பாட்டைப் பிரதிபலிக்கும் இன்னும் சில பொருட்களும் வைக்கப்பட்டிருக்கும். ஒரு தட்டிலே வெற்றிலை, பாக்கு, பழம் என்பனவும் திருநீறு, சந்தனம், குங்கும் ஆகிய பொருட்களும் அழகிய பூக்கள் சிலவும் அங்கு காணலாம். மலர்ச்சி, இனிமை, வாசனை, அழகு என்பனவற்றை எமது உள்ளத்தில் நிறைவாக வைத்திருந்து எமது அயலவர்களுடன் நாம் அவற்றைப் பகிர்ந்துகொள்ளவேண்டும் என்பதை இவை வலியுறுத்துகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறப்பான இரு விநாயகர் விரதங்கள்

## விநாயக சதுர்த்தி

விநாயக விரதங்களுள் மிக விசேஷமானது இது. இந்துக்கள் யாவரும் விரும்பி அநுஷ்டிக்கும் விரதம். விநாயகர் ஆலயங்களில் சிறப்பாகவும் ஏனைய ஆலயங்களில் பொதுவாகவும் இவ்விரத நாளிலே விசேஷ அபிஷேகம் பூஜை வழிபாடுகள் நிகழ்கின்றன. எனினும் இவ்விரதத்தினைப் பூஜை வழிபாடுகளுடன் இல்லங்களிலும் கைக்கொள்வது நன்று. விநாயகப்பெருமான் உற்பவமான தினம் இது.

ஆவணிமாத வளர்பிறைச் சதுர்த்தித் திதியன்று இவ்விரதம் அநுஷ்டிக்கப்பட வேண்டும்.

கந்தபுராணத்தில் சிறப்பித்துக் கூறப்படும் இந்த விரதமானது சூதமுனிவரால் பஞ்சபாண்டவருக்கு உபதேசிக்கப்பட்ட பெருமையை உடையது. துரியோதனனாதி கௌரவர்களின் கொடுமையினால் பாண்டவர்கள் வனவாசம் செய்ய நேர்கிறது. காட்டிலே மிகுந்த கஷ்டமும் மனவேதனையும் அடைந்திருக்கும் நிலையில் சூதமுனிவரை ஒருநாள் சந்திக்கிறார்கள்.

அப்போது தருமர் தமது கஷ்டங்கள் நீங்கிச் சுகமாக வாழ வழிகேட்கிறார். அதற்கு வழியாக இந்த விநாயக சதுர்த்தி விரதத்தை உபதேசிக்கிறார் சூதமுனிவர். அதுமட்டுமல்லாமல் இந்த விரதத்தை முன்பு அநுஷ்டித்துப் பயன்பெற்றவர்களின் வரலாற்றையும் எடுத்துக் கூறுகிறார்.

தமயந்தி நளனை மீண்டும் அடைந்ததும், கிருஷ்ணர் ஜாம்பவதியையும் சியமந்தகமணியையும் பெற்றுக்கொண்டதும், இராமன் சீதையை மீட்டதும், இந்திரன் அசுரப்பகையை வென்றதும், பகீரதன் கங்கையைப் பூமிக்குக் கொண்டுவந்ததும் இந்த விரத மகிமையினால்தான் என்று விளக்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனைக்கேட்ட பாண்டவரும் முறைப்படி விநாயக சதுர்த்தி விரதத்தைக் காட்டிலேயே அநுஷ்டித்து உரிய காலத்தில் ஆட்சி அதிகாரத்தைப் பெற்றனர். இஷ்ட சித்திகளைப்பெற - நினைத்த காரிய சித்தியை விரும்புவோர் இவ் விரதத்தைக் கைக்கொள்ளலாம்.

அதிகாலை நீராடி நித்திய கர்மாநுஷ் டானங்களை முடித்துக் கொண்டு பிரார்த்தனை வழிபாடுகள், ஆலய தரிசனம் முதலியவற்றில் ஈடுபடவேண்டும். மத்தியானம் ஒருபொழுது உண்ணலாம். நல்லெண்ணெய் சேர்க்கக் கூடாது என்பது விதி. இரவு பட்டினி இருக்க முடியாதவர்கள் பால்பழம் அல்லது பலகாரம் உண்ணலாம்.

வீட்டிலே பூஜைவழிபாடுகளுடன் விரிவாக இந்த விரதமிருக்க விரும்புவோர் வீட்டிற்கு ஈசான திக்கில் பசும்சாணியால் மெழுகித் தூய்மையாக்கப்பட்டு வெள்ளைகட்டித் தயார் செய்யப்பட்ட ஓரிடத்தில் அல்லது பூஜை அறையிலே மாவிலை தோரணங்களாலும் சிறிய வாழைமரம் முதலியவற்றாலும் அலங்கரித்து அங்கு கும்பங்களை முறைப்படி ஸ்தாபித்து பூஜைகளை நடத்தலாம்.

தத்தமக்குரிய புரோகிதரை அல்லது அருகிலுள்ள ஆலய அர்ச்சகரை அழைத்து இந்தப் பூஜையைச் செய்விக்கலாம். சங்கல்பத்துடன் ஆரம்பித்து பிராமண அநுக்ஞை, விக்னேஸ்வர பூஜை, புண்யாக வாசனம், பஞ்சகவ்யபூஜை முதலிய பூர்வாங்கக் கிரியைகளிலிருந்து ஆவாஹனாதி சர்வோபசார பூஜைகளையும் செய்து தீபாராதனை நமஸ்காரங்களுடன் நிறைவு செய்யலாம்.

விசேஷ நிவேதனங்களாக அறுசுவை உணவும், தேங்காய், வெற்றிலை, பாக்கு, பழம், என்பனவும் சொல்லப்பட்டிருக்கின்றன. நாவற்பழம், விளாம்பழம், வாழைப்பழம், கரும்புத்துண்டு, வெள்ளரிப்பழம், அப்பம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோதகம், கொழுக்கட்டை ஒவ்வொன்றிலும் இருபத்தொன்று என்ற எண்ணிக்கையில் படைத்து நிவேதனம் செய்ய வேண்டும். (வெள்ளரிப்பழத்தை இருபத்தொரு துண்டுகளாக நறுக்கி வைக்கலாம்.)

விநாயக சதுர்த்தி பூஜையில் இன்னொரு முக்கிய அம்சம் இருபத்தொரு பத்திரம், இருபத்தொரு புஷ்பம், இருபத்தொரு அறுகம்புல் என்பவற்றால் தனித்தனியாக அர்ச்சிக்கலாம். இறைவனை அவரது பலவித நாமங்களையும் சொல்லி ஓங்காரத்துடன் உச்சரித்து வணக்கம் செலுத்துவதே அர்ச்சனையாகும். ஒவ்வொரு நாமம் சொல்லும் போதும் ஒவ்வொரு பத்திரம் அல்லது புஷ்பம் சமர்ப்பித்தல் மரபு.

இவ்வித விசேஷ அர்ச்சனைக்குரிய நாமங்களும் அவற்றுக்குரிய பத்திர புஷ்பங்களின் பெயர்களும், அங்கபூஜைக்குரிய நாமங்களும், அங்கங்களும் (ஒவ்வொரு நாமங்களையும் சொல்லி மூர்த்தியின் திருவுருவத்தில் அல்லது படத்தில் அந்தந்த நாமத்துக்குரிய அங்கங்களில் பூவினால் அர்ச்சித்தல் அங்கபூஜையாகும்.) பின்னே அநுபந்தம் இரண்டில் தரப்பட்டுள்ளன.

அர்ச்சனைகளின் பின் வேதபாராயணம், தேவாரபாராயணம், விநாயகர்துதி பாராயணம் என்பவற்றையும் செய்து உத்வாசனம் செய்து (கும்பத்தில் ஆவாகனம் செய்து வழிபட்ட மூர்த்தியை அவரது யதாஸ்தானத்துக்கு அனுப்புதல்) அர்ச்சகருக்குரிய தாம்பூல தட்சணைகளை வழங்கி, விருந்தினர், அடியவர், ஏழைகள் ஆகியோருக்கும் உணவிட்டு அதன்பின் உணவருந்துதல் முறை.

மேலே விநாயகர் துதி என்ற இடத்தில் பதினோராம் திருமுறையிலுள்ள விநாயகர் துதிப்பாடல்கள், விநாயகர் கவசம், பிள்ளையார்கதை (ஔவையார்) முதலியவற்றைப் பாடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாத சதுர்த்தி விரதம்

மாதந்தோறும் வருகின்ற பூர்வபட்சச் சதுர்த்தி நாட்களும் விநாயகருக்குரிய விரத நாட்களே. சதுர்த்தி விரதம் எனப்படும் இந்த நாட்களிலும் விரதமிருப்பது மிக விசேஷமானதாகும். அவ்வாறு அநுஷ்டிக்க முடியாதவர்கள் விநாயக சதுர்த்தி எனப்படும் ஆவணிச் சதுர்த்தி நாளில் விரதமிருக்கலாம்.

மாதந்தோறும் விரதமிருக்க விரும்புவோர் ஆவணிச் சதுர்த்தியிலே பூஜைவழிபாடுகளுடன் சங்கல்பபூர்வமாக ஆரம்பித்து (இன்ன காரணத்துக்காக இந்த விரதத்தை நான் இத்தனை வருடம் கைக்கொள்வேன் என்று சங்கற்பம் பூண்டு) முறைப்படி தவறாமல் தொடர்ந்து கைக்கொள்ள வேண்டும். இருபத்தொரு வருடம் விரதமிருப்பது நன்று. இயலாதெனின் ஏழுவருடங்கள் அநுஷ்டிக்கலாம். அல்லது இருபத்தொன்றுக்குக் குறையாமல் மாத சதுர்த்தி விரதமிருந்து அதையடுத்துவரும் ஆவணிச் சதுர்த்தியில் நிறைவு செய்யலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சங்கடஹர சதுர்த்தி விரதம்

விநாயகப் பெருமானை நோக்கி அனுஷ்டிக்கும் அற்புதமான விரதங்களுள் சங்கடஹர சதுர்த்தி விரதமும் ஒன்று. சதுர்த்தி விரதம் என்ற வகையில் ஒவ்வொரு மாதத்திலும் வரும் இரண்டு பட்சச் சதுர்த்தி விரதங்களையும் கைக்கொள்பவர் சிலர். பூர்வபட்சச் சதுர்த்தி விரதத்தை மட்டும் அனுஷ்டிப்பவர்கள் சிலர்.

எப்படியிருப்பினும் விரத முறைகளைச் சரியாகத் தெரிந்து, அதற்குரிய பூஜைகளையும் சேர்த்துச் செய்பவர்கள் மிகச் சிலரே. அதிசிறப்பு வாய்ந்த இந்த சங்கடஹர சதுர்த்தி விரதத்தின் மகிமையை அறிந்து அதனை முறைப்படி அனுஷ்டிததால் கைமேற் பலன் கானலாம்.

ஆலயங்களில் ஆகம முறைப்படி கும்ப பூஜை, அபிஷேகம், பூஜை, சுவாமி வீதி வலம் வருதல் முதலியன சிறப்பாக நடைபெற்று வருகின்றன. பூர்வபட்சச் சதுர்த்தியின்போது சந்திரனைப் பார்க்கலாகாது. அதனால் சந்திரோதயத்தின்முன் திருவிழா முடிவுபெற்றுவிடவேண்டும். அபரபட்சச் சதுர்த்தியாகிய சங்கடஹர சதுர்த்தியின்போது சந்திரனைத் தரிசிக்கவேண்டும். அதனால் சந்திரோதயத்தின்போது திருவிழா நடைபெறும்.

விரதம் அனுஷ்டிப்பவர்கள் சிலர் பகலில் உபவாசமாக இருந்து இரவு சுவாமி தரிசனமாகியபின் பொங்கல் உண்பதுண்டு. ஆனால் பொதுவாக சோமவார விரதத்திற்கு மட்டுமே இரவில் அன்னம் உண்ணும் வழக்கம் பெரியோரிடம் இருந்தது. ஏனைய விரதங்களுக்கு இரவில் அன்னம் அருந்துவது ஏற்றதன்று. உபவாசமே சிறந்தது. இயலாதவர்கள் விநாயகரது நிவேதனமாகிய மோதகம் முதலியவற்றை மட்டும் உண்டபின் மறுநாள் காலையில் பாரணை செய்வது தகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சங்கடஹர சதுர்த்தி விரதம். சிறப்பான விதிமுறைகள்.*

இவ்வாறு பொதுவான முறையில் ஆலய வழிபாட்டுடன் விரதம் கைக்கொள்வதைவிடச் சிறப்பானமுறையில் தனியான விரத பூஜைகளையும் செய்து அனுட்டித்து மிகச்சிறந்த பலனை மிக விரைவாகப் பெறமுடியும்.

**சிறந்த கல்வியும் தெளிந்த ஞானமும் செல்வமும் மகப்பேறும் நோய் நீக்கமும்** இவ்விரதத்தின் பலன்களாகச் சொல்லப்பட்டிருப்பினும் காரியத் தடைகள் சங்கடங்கள் யாவும் நீங்கி எடுத்த காரியங்கள் யாவும் வெற்றிபெற விரும்புவோர் இவ்விரதத்தை அனுஷ்டிப்பர்.

அதிகாலை நீராடித் தோய்த்துலர்ந்த ஆடையணிந்து நித்திய கர்மானுஷ்டானங்கள் நிறைவேற்றியபின் "சந்திரோதய வேளைவரை எந்த உணவும் உட்கொள்ள மாட்டேன். உன்னையே நினைத்திருப்பேன். என் சங்கடங்களை நீயே தீர்க்கவேண்டும்" என்று விநாயகரை மனமுருகி வேண்டி விரதத்தை ஆரம்பித்துப் பகல் முழுவதும் உபவாசமாக இருக்கவேண்டும்.

ஆவணி மாதத் தேய்பிறைச் சதுர்த்தி மஹா சங்கடஹர சதுர்த்தி எனச் சிறப்பாகப் போற்றப்படுகிறது. மாசிமாதச் சதுர்த்தியும் சிறந்ததே. இவ்விரண்டில் ஏதாவதொரு நாளில் விரதத்தை ஆரம்பிக்கவேண்டும். செவ்வாய்க் கிழமையுடன் சேர்ந்து வரும் சதுர்த்தியும் சிறப்பானதே. இருபத்தொரு வருடம் அனுஷ்டிப்பது நன்று. ஏழு வருடம் அல்லது ஒரு வருடம் அனுட்டித்த பின்னர் பூர்த்தி செய்யலாம்.

ஒவ்வொரு மாதமும் தேய்பிறைச் சதுர்த்தியன்று இந்த விரதத்தை அனுஷ்டிப்பதுடன் சந்திரோதய வேளையில் முறைப்படி சுத்தம் செய்த வீட்டிலோ அல்லது ஆலயத்திலோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகுபடுத்தப்பட்ட மண்டபமொன்றிலே மேடை அமைத்துத் தானியங்கள் பரப்பிக் கும்பம் வைத்து அதன்மீது தங்கம், வெள்ளி அல்லது பித்தளையினால் ஆகிய விநாயகர் திருவுருவம் ஒன்றையும் வைத்து முறைப்படி சகல உபசார பூஜைகளையும் நிறைவேற்றி விநாயகர், சந்திரன், சதுர்த்தித் திதிதேவி ஆகியோருக்கு அர்க்கியம் வழங்கி சந்திர தரிசனம் செய்தபின் குருதட்சணை முதலியன வழங்கி விரதபூஜையை நிறைவு செய்யலாம். மறுநாள் காலை முறைப்படி பாரணை செய்யவேண்டும்.

## விரதகதை

முன்பு ஒரு சமயம் உமையம்மையார் சிவபிரானை நோக்கிக் கடுந்தவமியற்றியும் சிவன் பிரத்தியட்சமாகாதது கண்டு வருந்தியபோது விநாயகப் பெருமான் அவருக்கு இந்த விரதத்தை எடுத்துக்கூறித் தம்மைநோக்கி இதனை அனுஷ்டிக்குமாறு தெரிவித்தார். அதன்படி உமையும் அனுஷ்டித்து சிவதரிசனம் பெற்றாள்.

பின்னர் முருகப் பெருமான் முனிவர்களுக்கு இவ் விரதத்தை உபதேசித்தார். பாண்டவர்கள் வனவாசத்தின்போது பகவான் கிருஷ்ணர் உபதேசித்தபடி இதனை அனுஷ்டித்தனர். திரிபுர தகனத்தின்முன் சிவபிரானும், மூவுலகை ஆளவேண்டி இந்திரனும் சீதையைத் தேடிச் சென்ற அனுமனும் இவ்விரதம் மேற்கொண்டு வெற்றிகண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சில முக்கிய ஐயங்களும் அதற்கான தீர்வும்

### திருமண நாள் குறித்தபின் வீட்டில் முன்னோர்களின் திதி வந்தால் அந்த நாளில் திவசம் செய்யலாமா?

அவசியம் செய்யவேண்டும். திவசம் முதலியன அமங்கல மானவை எனப் பலர் தவறாக நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். அப்படியன்று. திருமண தினத்தில் ஆரம்பத்தில் அந்தணர்களுக்கு அரிசி, காய்கறி தானமாக வழங்கும் நிகழ்வு ஒன்று நடைபெறுவதைப் பாரத்திருப்பீர்கள். அதனை நாந்தி சிராத்தம் என்பர். தமது வம்சத்தவர்களின் மங்கல நிகழ்வைக் காணவும் ஆசி வழங்கவும் ஆவலுடன் வருகின்ற நமது முன்னோர்களான பிதிர்களின் ஆசி வேண்டியே அந்த நிகழ்வு நடைபெறுகிறது. எனவே மங்கல நாள் குறித்தபின் திவசம் நடத்துவதில் எவ்வித தவறும் இல்லை. அதனைச் செய்யாமல் விடுவதுதான் மாபெரும் தவறு.

### மனைவி மாதவிலக்காக இருக்கும் நாட்களில் கணவன் கோவிலுக்குப் போகலாமா?

மாதவிலக்கு என்பது அந்தப் பெண்களுக்கு மட்டும் நான்கு நாட்களுக்கு உள்ள தீட்டு ஆகும். ஐந்தாம் நாள் எண்ணெய் தேய்த்து அல்லது பால் வைத்து முழுகியபின் அவள் சுத்தமாகிறாள். அதன்பின் அவளுக்கு எவ்வித விலக்கும் இல்லை.

அந்த நான்கு நாட்களும் அவள் **வீட்டு விலக்கு** என்ற சொல்லுக்கு இணங்க விலகி இருத்தல் வேண்டும். கோவிலுக்கு மட்டுமல்லாமல் பொது வைபவங்கள், மங்கல நிகழ்வுகளில் கலந்துகொள்ளாமல் வீட்டு வேலைகளில் ஈடுபடாமல் ஒதுங்கி இருக்கவேண்டும் என்பதே முறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றவர்கள் அவளுடன் தொடாமலும் (முட்டாமலும்), உடுப்புகள் சேர்த்துப் புழங்காமலும் இருக்கவேண்டும். அவ்வாறிருப்பின் கணவனுக்கோ மற்றவர்களுக்கோ எந்தத் துடக்கும் இல்லை. அவர்கள் ஆலயம் செல்லலாம்.

ஆனால், மாதவிலக்கான பெண்ணே வீட்டுக் காரிய மனைத்தையும் செய்ய, அவளால் சமைக்கப்பட்ட உணவை மற்றவர்கள் சாப்பிடுகிற சந்தர்ப்பம் இருக்குமாயின் மற்றவர்களுக்கும் அந்தத் துடக்கு உண்டு. அவர்கள் ஆலயம் செல்வதைத் தவிர்க்கவேண்டும்.

## சுவாமி திரு உலா வரும் வேளையில் வைக்கின்ற நிறைகுடத்தை உடனேயே சுவாமிக்குமுன் பூமியில் சொரிகின்றனரே, இது சரியா?

மிகத் தவறான இந்தச் செயல் பரவலாக நம்மிடையே நாளாந்தம் செய்யப்படுகிறது. அறியாமையும், சரியானதை வலியுறுத்தி அறிவுறுத்த ஆட்கள் இல்லாமையும்தான் இதற்குக் காரணம்.

நிறைகுடம் என்பது நிறைவானது. மங்கலப் பொருட்களைக் கலைப்பது எந்த நல்ல காரியத்திலும் செய்யப்படுவதில்லை. நிறைகுடம், கும்பம், பாததீர்த்தம் என்பவற்றின் வேறுபாடுகளை நம்மவர்கள் அறியவேண்டும். மங்கலமாக வைக்கப்பட்ட நிறைவான நிறைகுடத்தின் புனித நீரைக் கீழே கொட்டிக் கால்களால் மிதிக்கலாமா?

இறைவனுக்குப் பாததீர்த்தம் வழங்குகின்றோம் எனச் சிலர் விளக்கம் கூறுகின்றனர். அவ்வாறாயின் இரண்டு ஐயங்கள் எழுகின்றன. பாததீர்த்தம் யாரும் வழங்கலாமா? அதற்கு அதிகாரமுடையவர் குருவே. அடுத்தது, எப்போது பாததீர்த்தம் வழங்குவது. ஒருவர் எமது இடத்திற்கு வரும்போது அவரை வரவேற்கும்போதுதான் பாததீர்த்தம் வழங்கவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவன் வீதி உலா முடிந்து திரும்பவும் உள்ளே வரும்போது குரு பாததீர்த்தம் வழங்கி வரவேற்கிறார். அப்படியிருக்க உங்கள் இல்லத்திற்கு எழுந்தருளிய ஆண்டவனுக்கு நிறைகுடம் வைத்து வரவேற்று நிவேதனம் செய்து அர்ச்சனை செய்தபிறகு பாததீர்த்தம் வழங்கி வழியனுப்பி வைப்பதா?

எனவே, நிறைகுடத்து நீரை அப்படியே வைத்திருந்து பின்னர் கால்படாத இடங்களில் ஊற்றுவதே முறை.

## கர்ப்பிணிப் பெண்கள் கோவிலுக்குச் செல்லக் கூடாதா? கர்ப்பவதிகள் விரதம் அனுட்டிக்கலாமா? தாய்மையடைந்திருக்கும்போது ஆலயத்திற்குச் செல்லலாமா?

கர்ப்பிணிகள் சுமார் நான்கு மாதம் நிறைந்து ஐந்து மாதம் ஆகியபின் கோவில் வாசலுக்குப் போவதும், அவசியமில்லாமல் வெளியிடங்களுக்குச் செல்லுதலும், அந்திப் பொழுதுகளில் வீட்டிற்கு வெளியே வருவதும் விரும்பத் தக்கதல்ல.

விரத அனுட்டானங்களிலிருந்தும் அவர்களுக்கு விலக்களிக்கப்பட்டுள்ளது. குழந்தை என்னும் தெய்வத்தை ஊட்டி வளர்க்கும் கடப்பாடு அவர்களுக்கு இருப்பதால் கர்ப்பிணிகளும் பாலூட்டும் தாய்மாரும் விரதம் அனுட்டிப்பது பெரியவர்களுக்குச் சம்மதமில்லை.

முப்பத்தொரு நாட்களில் தாயின் துடக்கு நீங்குவதில்லை. நாற்பத்தொரு நாட்களின் பின்னரே தாயும் குழந்தையும் கோவிலுக்கு முதல்முதல் செல்ல அனுமதிக்கப்படுகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கர்ப்பிணிகளின் கணவன்மாருக்கும் இத்தகைய கட்டுப்பாடுகள் உண்டா?

ஆலயம் செல்வதற்கு அவர்களுக்கு எவ்வித தடையுமில்லை. ஆனால், ஆறு மாதத்திற்கு மேற்பட்ட கர்ப்பிணிப் பெண்களின் கணவர்கள் ஆலயத்தில் காப்புக் கட்டுதல், பவித்திரம் அணிந்து கிரியைகளில் கலந்துகொள்ளுதல் என்பவை தவிர்க்கப்படுவது நன்று.

## மரண வீடுகளில் கலந்துகொள்வோர் அங்கு நடைபெறும் நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதால் ஏற்படும் தீட்டு (துடக்கு) எத்தனை நாட்களில் கழியும்?

பொதுவாக நமது உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள் அனைவரது துக்கங்களிலும் கலந்துகொள்ள வேண்டிய கடப்பாடு நமக்கு உண்டு. மரணச் சடங்கின்போதும் அதற்குப்பின் நடைபெறும் கிரியைகளிலும் கலந்துகொண்டு அவர்களுக்கு வேண்டிய உதவிகளை அனைவரும் செய்ய வேண்டும். ஆனால், அதில் சில வரையறைகள் உண்டு.

புதிதாகத் திருமணம் செய்தோர், கர்ப்பமுற்றிருக்கும் பெண்ணின் கணவன், விசேஷ தீக்ஷை பெற்று நித்ய சிவபூஜை செய்வோர், வீட்டில் திருமணம் முதலிய மங்கல நிகழ்ச்சிக்கு நாள்குறித்தோர், அடுத்துவரும் நாட்களில் தமது வீட்டில் திவசம் முதலிய பிதிர்காரியம் செய்யவிருப்போர் முதலியவர்கள் மிக மிக நெருங்கிய உறவினர்கள் அல்லாதோரின் மரணச்சடங்குகளில் கலந்துகொள்வதைத் தவிர்த்துக்கொள்ளவேண்டும். அடுத்துவரும் நாட்களில் அங்கு சென்று துக்கம் விசாரிப்பதன்மூலம் தமது கடப்பாட்டை இவர்கள் நிறைவேற்றிக் கொள்ளலாம். சமூகம் இதனை அவசியம் ஏற்றுக் கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரணச்சடங்கில் சவத்தை நெருங்கிக் கடமைகள் புரிவது, வாய்க்கரிசி போடுவது, குளிப்பாட்டுவது முதலியவற்றிலும் அடுத்துவரும் நாட்களில் அங்கு நிகழும் உரிமைச் சோறு சாப்பிடுதல், எட்டுச் செலவு முதலிய சடங்குகளிலும் மிக நெருங்கிய - ஆசௌச உரித்துடையோர் மட்டும் கலந்துகொள்ளவேண்டும். அவ்வாறு கலந்துகொள்ளுவோர் சம்பந்தப்பட்டவர்களின் துடக்கு கழியும்வரை (முப்பத்தொரு நாள்) தாமும் துடக்குக் காக்க வேண்டும். முக்கியமாக மரணம் நிகழ்ந்த வீட்டில் உணவருந்துதல், தேநீர் பருகுதல் முதலியவற்றைச் செய்வோர் இவ்வாறு காக்க வேண்டும்.

சவத்தைக் காவுவோர் மூன்று நாட்களாவது ஆலயம் செல்லுதல், சுவாமி காவுதல், பூஜை வழிபாடுகளில் சங்கல்பம் செய்து கலந்து கொள்ளுதல் முதலியவற்றைத் தவிர்ப்பது நலம்.

சாதாரணமாக மரண வீட்டிற்குச் சென்று துக்கம் விசாரித்துவரும் ஒருவர் அன்றைய தினம் மட்டும் அதாவது வீடு திரும்பியதும் ஸ்நானம் செய்யும்வரை அசுத்தமுடையவராகிறார்.

இறந்தவரின் ஆசௌச உரித்துடையோர் முப்பது இரவுகள் முழுமையாக ஆசௌசம் காக்கவேண்டும். கர்த்தா (கொள்ளி வைத்தவர்) ஒரு வருட காலத்திற்கு ஆலயத்தினுள் செல்வதில்லை என்பதும் கிரியைகளில் கலந்துகொள்வதில்லை என்பதும் பொதுவான வழக்கு. ஆனால், சிவபூஜை, சிவாலய பூஜை செய்வோருக்கு இவ்வழக்கம் பொருந்தாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவம

**வம்சா**

சின்னத்துரை
+
நாகம்மா

சுந்தரலிங்கம்

இராசமனோகரி
+
சிவப்பிரகாசம்

பிறேமகாந்தன்
சிவகாந்தன்
சசிகாந்தன்
ரதிகா
ரஜனிகாந்த்

செல்வரத்தினம்
+
சந்தனலட்சுமி

றஞ்சித்
றாகினி
விக்கினேஸ்வரன்
ருசாந்தன்

புஷ்பகாந்தி
+
செல்லத்துரை

கவிதா
வனிதா
இதயசந்திரன்
வாசுகி
கோபிகிருஷ்ணா

கணேசன்
+
யோகேஸ்

பிரசாந்த
சுகித்திரா
ருசாந்தன்
அனுஜன்
அனேதய

கோபிநாத்
+
அஞ்சலிக்கா

இலக்கியன்
சேகரன்
செழியன்

கோபிசங்கர்
+
யான்சி

சாரங்கா
+
செங்காதன்

சுப்ரஜா
சயனுஜா

அர்ச்சனா
+
சுரேஸ்கு

அனயா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

**வம்சாவளி**

விநாசித்தம்பி
+
தங்கம்மா

- கங்காதரன் + ஜெயவதனா
- தேவகி
  - அர்ச்சனா + சுரேஸ்குமார்
    - அனயா
  - கோபிவரதன் + ரட்னாவதி
    - றிச்சான்
- கலாதரன் + குலமதி
  - கஜனவி
  - கஜ்தூரி
  - காருசன்

- ணேசன் + பாகேஸ்வரி
  - பிரசாந்தன்
  - கித்திரா
  - சாந்தன்
  - னுஜன்
  - அனேதயன்
- சிவகுமார் + தவமலர்
  - ருசாந்தி
  - கிருசாந்தி
  - கிருசாந்தன்
  - சுகிர்தா
- ரவிச்செல்வம் + சிலானி
  - சர்மிளா
  - பவிராஜ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையதை எதை இழந்தாய்.
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டுவந்தாய்
அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைத்திருந்தாய்,
அது வீணாவதற்கு?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ
அது நாளை
மற்றொருவருடையதாகிறது
மற்றொருநாள்,
அது வேறொருவருடையதாகும்.

**"இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாராம்சமாகும்"**

**பகவான்
ஸ்ரீ கிருஷ்ணர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org